123

ஸ்ரீ:.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 5.] ராக்ஷஸஹு வைகாசிமீ [ஸஞ்சிகை 4.

𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌕𑌮𑌨𑌂 𑌤𑌮𑌾𑌲𑌵𑌰𑍍𑌣𑌂 𑌰𑌵𑌿𑌕𑌰𑌗𑍌𑌰𑌵𑌰𑌾𑌮𑍍𑌬𑌰𑌂
𑌦𑌧𑌾𑌨𑍇 - 𑌵𑌪𑍁𑌰𑌲𑌕𑌕𑍁𑌲𑌾𑌵𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌬𑍍𑌜𑌂 விஜயஸகெ
𑌰𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇𑌽𑌨𑌵𑌦𑍍𑌯𑌾 ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**வைசாக மாஸம் புத்தர்.**

இந்த மாஸம் விசேஷமாக ஆஸ்திகரால் ஸ்மரிக்கத்தக்கது. அங்யர்க்கும் இது சித்தசுத்தி ஹேதுவாகின்றது. இந்த மாதம் பௌர்ணமிதிநம் புத்தருடைய ஜநந காலமென்பர். உலகின் கண் உத்பந்நரான மர்த்யர்க்குள் புத்தர் ஓர் மஹாத்மாவென்பதை யாவரும் அப்யுபகமம் செய்யலாம். ஸர்வபூதங்களினிடமும் அவரைக்காட்டிலும் ஸுஹ்ருத்தமர் இருந்திலர். ஆர்ய தர்மங்கள் அவருடைய சரித்ரத்தில் மிகவும் ப்ரகாசித்தன. அவர் ஜந்மத்தால் ஆர்யரே. அவர் கற்ற வித்யைகள் ஆர்யவித்யைகளே. ஆனாலும் அவர் நாஸ்திகவாதங்களை அப்யுகமம் செய்தனர். அஹிம்ஸையை ஸர்வப்ரகாரத்தாலும் கொண்டாடினர்; ஆதலால் வேதங்களால் விஹிதங்களான அவஸரங்களிலும் அதை அவர் ஸஹிக்கவில்லை; ஆதலால் வேதங்களில் அவர் ப்ராமாணத்வ புத்தியை த்யாகம் செய்தனர். அக்காலத்திலும், இக்காலத்திலும் லோகத்

தில் ஜந்துக்களில் பெரும்பாலோர் துக்கத்தையே மிகுதியாக அநு பவிக்கின்றனர். ஸர்வஜீவன்களும் ஒன்றை மற்றொன்று ஆகார மாய்ப் புசிக்கின்றன. அவை யாவும் தம் நிலைமையில் க்ரௌர்ய பாவத்தையே ப்ராயேண காட்டுகின்றன. தநவந்தனை ஒருவன் ஸுகாநுபவம்செய்ய அதன் இன்மையால் வருந்துகின்றவர் பலர். ச்ருங்கார ரஸமறிந்த ஒருவன், "மாசறுபொன்னே வலம்புரி முத்தே, காசறுவிரையே கரும்பே தேனே, அரும்பெறற்பாவாய் ஆருயிர்மருந்தே, பெருங்குடி வணிகன் பெருமடமகளே, மலை யிடைப்பிறவா மணியே என்கோ, அலையிடைப்பிறவா அமுதே என்கோ, யாழிற்பிறவா இசையே என்கோ, தாழிருங் கூந்தல் தையால் நின்னை", என்று கொண்டு, தன்னுளங்கொண்ட பெண் மணியோடு இல்லறம் நடத்த, அநுரூபமான மனைவியை அடைந் தும் அடையாமலும் வருந்திப் பிழைப்பவர் ஆயிரக்கணக்கில் நேர்வர். வ்யாதியால் வருந்திப் பொறுக்கமுடியாத யாதனையால் உயிரிழக்கும் குழவிகள் கணக்கில. என் வருந்துகின்றோமென்று அவை எண்ணவும் தெரிந்தில. பூகம்பத்தாலும், வெள்ளத்தாலும், ஸமுத்ரத்திலும், அந்யாய யுத்தத்திலும், வ்யாதிகளாலும், துர்பி க்ஷத்தாலும், ஒரே காலத்தில் மரணமடைபவர் ஸங்க்யையைப் பற்றி எண்ணவும் வேண்டுமோ? இப்படி ஜந்துக்களின் துக்காநு பவத்தை மிகவும் சிந்தித்து, இதை ஸஹிக்கும் மஹா கருணா ஸமுத்ரமெனப்பட்ட ஈச்வரனுடைய அஸ்தித்வத்தில் புத்தர்க்கு விச்வாஸம் குன்றியது. கர்மாத்யக்ஷனில்லாமல் பலம் தரும் கர்ம மெனும் சக்தியை ஒப்புக்கொண்டு, அதனால் கட்டப்பட்ட சேத நன் மரணாநந்தரம் அநுவர்த்திக்கின்றானென்பதையும் அவர் ஒப்புக்கொண்டாரில்லை. அவர் நிராகரித்தபோதிலும், அவரிடம் நின்ற நித்ய சேதநனுடைய அஸ்தித்வத்தையும், அவருடைய கல் யாணகுணங்களையும் யாம் நம்புகின்றோம். தயாப்ரேரிதராய், லோகஹிதத்தை உத்தேசித்து, அவரால் ஏற்படுத்தப்பட்ட ஸம யமானது ஸத்ஸம்ப்ரதாய விருத்தமானபோதிலும், அவர் தர்ம மார்க்கத்தை நாஸ்திகராக நின்றும் ப்ரவர்த்திப்பித்தபடியாலும், அவருடைய ஸமயத்தை லோகத்தில் பெரும்பான்மையோர் வழி படுவதாலும், அவருடைய தேசஸ்தராயும், அவரது ஆர்யஜாதி யைச் சேர்ந்தவர்களாயுமுள்ள யாவரும் அவரை இம்மாஸத்தில் ஸ்மரித்தல் யுக்தமே.

புத்த ஸமயத்தை வேதாந்த மதத்தால் நிராகரித்த ஸ்ரீசங்க ராசார்யருடைய அவதார மாஸமும் இதுவே. ஸ்ரீசங்கராசார்யர் அந்த மஹானுடைய ப்ரஸ்தாநத்ரய பாஷ்யங்களை நமது ஸம்ப்ரதாயஸ்தர்கள் படித்தாராகில் அந்த பாஷ்யங்களுக்கும் நம்மிராமானுஜன் பாஷ்யங்களுக்கும் நேர்ந்த ஒற்றுமையின் விசேஷங்களை நன்கறியலாம். போதாயனர் மதத்தைப் பலவிடங்களில் ஸ்ரீசங்கராசார்யர் தூஷித்தாராயினும், போதாயநருடைய வ்ருத்திக்ரந்தம் அவருடைய பாஷ்யத்துக்கு மிகவும் ஸஹாயமாக இருந்திருக்கவேண்டும். அவ்வண்ணமே, தத்வ நிர்ணயம் செய்யும் அவஸரங்களில் பகவத்ராமானுஜனுக்கு சங்கரர் பூர்வபக்ஷியாக நின்றாராகிலும், அவருடைய க்ரந்தங்கள் விசிஷ்டாத்வைத பாஷ்யங்களுக்கு விசேஷ உபகாரமாக இருந்திருக்கவேண்டும். அத்வைதி யென்று பெயர் கொள்பவரில் ஆயிரத்தில் ஒருவர்கூட அநுஷ்டாநத்தால் அவ்வண்ணம் ப்ரகாசிக்கமாட்டார். ஸோஹம்ப்ரஹ்மாஸ்மி என்றறிந்த பிறகு உலக வ்யாபாரம் முற்றிலும் ஒழியவேண்டும். பரமார்த்த தசையில் அத்வைதம் ஸத்யமென்று விச்வஸித்தபோதிலும், ப்ராயேண அத்வைதிகள் அநுஷ்டிப்பது விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயமே. மேலும் ஸூத்ரகார மதாநுகுணமாக சங்கர பாஷ்யங்களின் மிகுந்த பாகங்களில் விசிஷ்டாத்வைத முறையே விசதமாகச் சொல்லப் படுகின்றது.

ப்ராணாதிகரண சங்கரராமானுஜ பாஷ்யங்களையும், சங்கர பாஷ்யத்துக்கு ஆநந்தகிரி டீகையையும் பார்த்து, "அதஏவ ப்ராணஃ" எனும் ஸூத்ரத்துக்கு வ்ருத்திக்ரந்தத்தில் உதாஹரித்த "ப்ராணஸ்ய ப்ராணம்", "ப்ராணபந்தநம் ஹி ஸோம்ய மந:" எனும் விஷய வாக்யங்களை நிராகரித்து, "ஸர்வாணி ஹ வா இமாநி பூதாநி ப்ராணமேவாபிஸம்விசந்தி" என்று ஆரம்பிக்கும் வாக்யங்களையே விஷய வாக்யங்களாக சங்கராசார்யர் எடுத்தபடி, நம்மிராமநுஜனும் எடுத்திருப்பஸத யோசித்தால், "தந்நோ தேவாநாம் ஸாரேண ஸத்ரா ஸ்ரீர் ப்ராணோ ப்ராணஸ்ய சக்ஷுஷே", எனும் ஸங்கல்பமும் சிலவிடங்களில் கழிந்து, சங்கராபிப்ராயாநுஸாரித்வம் க்வ

சித்வசித் ராமாநுஜன் திருவுள்ளத்துக்குப் பொருந்துமெனவும் தோன்றுகின்றது. இன்னும் பாஷ்யகாரரான ஶங்கரர், ஸ்வோக்திகளாலும், ஸந்நிஹிதர்களான ஶிஷ்யருடைய வசநங்களாலும், பாகவதரென்பது ஸ்பஷ்டமாக ஏற்படுவதைத் தத்வவிசாரத்தில் முன்னமே ஸமர்த்தித்திருக்கின்றோம். “ந ஸம்ஶய க்ஷ்வேண ஶ்ருதி” என்று, பகவான் செய்த ப்ரதிக்ஞையானது, அத்வைதமான தத்வம் தனக்குள் ஸத்விதீயதையை ஸஹிக்குமா ஸஹிக்காதா எனும் யோசநாபேத மொன்றாலேயே, ஸங்கோசத்தை அடையமாட்டாது. நமது தேசத்தின் கீர்த்தியை நிலைநிறுத்தப் பிறந்த மஹாபுருஷர்க்குள் ஒருவரான ஸ்ரீஶங்கராசார்யரும், நம்மவர் யாவராலும் இம்மாஸம் ஸ்மரிக்கத்தக்கவர்.

**ஶங்கராசார்யருக்கு ஆலயம் கட்டுவதல்**

அவருடைய பக்தர்கள் அவர்க்கு ஆலய நிர்மாணத்தையும் விக்ரஹ ப்ரதிஷ்டையையும் தத்காலம் வேண்டுகின்றனர். இது விஷயத்தில் அவர்கள் யோசிக்கத்தக்க தொன்றுண்டு. ப்ரஹ்மஸூத்ரம் இரண்டாவது அத்யாயம் இரண்டாவது பாதத்தில் முடிவான அதிகரணங்கள் பசுபத்யதிகரணமும் பாஞ்சராத்ராதி கணமும். பசுபத்யதி காரணாரம்பத்தில், ஆநந்தகிரி “மாஹேஶ்வரமதம் நிராகரோதி” என்று பாஷ்ய விவரணம் செய்கின்றார். பாஷ்யத்திலும் “மாஹேஶ்வராஸ்து மந்யந்தே” என்றாரம்பித்துக்கண்டநம் செய்யப்படுகின்றது. பாஞ்சராத்ராதி கரண பாஷ்யத்திலும், பாஞ்சராத்ரம் “ஶ்ருத்யந்யாஸாமீணவஹுஶ்ருதிஃ” என்ற பிப்ராயப்பட்டிருக்கிறது. இதனால் பாசுபதம் அப்படிக்கில்லை யென்பதும் விவக்ஷிதம். இப்படிக்கிருக்கையில், பூர்வாதிகரணத்தில் பசுபதி யெனும் தேவதா விஷயத்தில் பாஷ்யகாரருடைய விப்ரவாஸ ப்ரகடந ரூபமான யாதொரு வசநத்தையும் கண்டிலோம். பாஞ்சராத்ராதிகரண பாஷ்யத்தால் ஶங்கராசார்யர் விஷ்ணு பக்தரென்பது நிர்விவாதமாக ஸித்திக்கின்றது. ஆகமாநுஸாரிகளால் ப்ரதிஷ்டிதங்களான ஶைவவைஷ்ணவ தேவாலயங்கள், ஆகமமதங்களை நிராகரித்த ஶங்கராசார்யருடைய விக்ரஹங்களுக்கு இடங்கொடுக்கவில்லை. இதுவரையிலும் பண்டிதர்களான அத்வைதிகள் அதனிமித்தம் போகித்தாரில்லை. ஸ்ரீஶங்கர

பகவத்பாதருடைய அவதார தேசம்கூட அவர்க்கு ஓர் ஆலயம் கொண்டிலாத காரணத்தால் அவருடைய யஶஸ்ஸுக்கு யாதொரு குறைவும் கண்டிலோம். தத்காலம் மடாதிபதிகளென்போர் சரித்ரத்தைச் சிந்திக்குங்கால், அவர்க்குள் தப்பிப்பிறந்தனரென்று சொல்லத்தக்கவரும், கூடியமட்டும் ஸத்சரித்ரத்தையே காப்பாற்றினவருமான ஶ்ருங்கேரி மடாதிபதிகள் காலாடியில் தமது ஸம்ப்ரதாய குலபதிக்கு ஆலயம் நிர்மித்தார். இதனாலன்றோ, அத்வைதிகள் ஸ்ரீஶங்கரர்க்கு அந்ய தேசங்களில் ஆலயங்களை அபேக்ஷிக்கின்றனர்? அபேக்ஷித்தாலும் ஶைவவைஷ்ணவ ஆகமாபேக்ஷையின்றி ஸ்வதந்த்ரமாக அவர்க்குக் கோவில் கட்டக்கடவர். அதனுள் ஈஶ்வரனென அவர் உபாஸித்த வாஸுதேவனுடைய விக்ரஹத்தையும் ப்ரதிஷ்டை செய்தாராகில் அவருடைய அத்யவஸாயத்தையும் பஹுமானிப்பாரென எண்ணுகின்றோம்.

**ஶடகோபன்**

ஆனால், நம்முடைய ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு இந்த மாஸம் தென்குருகைப் புநிதன் அவதார மாஸமென்பது முக்யமாக யோசிக்கத்தக்க விஷயம். பகவத் விஷயமான ஸர்வ ஶாஸ்த்ரங்களுடைய ஸாரபூதமென்றும், ஶாந்திரஸத்துக்கு ஓரே வாஸஸ்தானமென்றும், ரஜோகுண தமோகுண விஸ்தாரங்களால் யாவரையும் கட்டுகின்ற மாயையின் தரணத்தைப் படிப்பவர்க்கு ஸாதித்துக் கொடுக்குமென்றும், (அதுவும், "மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்திதே", என்று ஶரண்யன் சொன்னபடிப் படிப்போர்க்கு அவன் திருவடிகளில் ஸ்வாத்ம ஸமர்ப்பணம் செய்யவேண்டுமென ஓர் த்வரையை உண்டுபண்ணி, அதன் மூலமாக ஸாதித்துக் கொடுக்கும் என்றும்,) ஸம்ஸாரமாகின்ற ஸமுத்ரத்தில் மூழ்கிப்போன ஜநங்கட்கு அதனெல்லையாகின்ற கரையை அடைவிப்பிக்கத்தக்க ஸாதநமாகின்றதென்றும், இப்படிப்பட்ட மஹாகுணங்களுடன் கூடிய ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தியானது லக்ஷ்மீகாந்தனாகின்ற மஹாநிதியை அஸ்மத் ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு ப்ரகாஶிப்பிக்கக் கடவதென்றும், இவ்வண்ணமாக நிகமாந்த மஹாதேசிகனால் ஸ்துதிக்கப்பட்ட திவ்ய ப்ரபந்தங்களை நமக்கு அநுக்ரஹித்துத்தந்த மஹாத்மாவை எம்மட்டுந்தான் நினைக்கக்கூடாது? அவர் லோகத்தில் இருந்த காலமெல்லாம், யோகத்தில் பகவானை

அநுபவித்துக்கொண்டும், இதர காலங்களில் பகவத் விஶ்லேஷ த்தை ஸஹிக்காமல், அவ்விரஹத்தால் தபித்துக்கொண்டும் ஜீவித் தாராகையால், "ெநநம்வாஜாகரதிஸவ-ஷாஜாநம்கரதி, ெநநம்வஜாதவசிஸவ-ம்வாஜாசிம்தவதீ" என்று உபநிஷத் வெளியிட்ட வண்ணம், பாபசூந்யராய் இருந்து விட்டார். அவரைப்போல் பகவதநுபவம் செய்ய அதிகாரிகள் இலர். ஆனல் அவர் விரஹத்தை விஸ்தாரமாக ப்ரகாசிப்பிக்கும் பாசுரங்கள் அவற்றைச் சிந்திப்போர்க்கு மஹாகுணங்களை உண்டு பண்ணக் கடவன. அப்படியவை செய்கின்றனவோ? எம்பெருமான் திரு வீதி யலங்கரிக்குங்கால், "வாரநெதாராநஷஸவஃ" எனும் ப்ரகாரம், இதர ஆழ்வார் பாசுரங்களை உரக்கப்பாடிச் செல்லும் வழியே, சடகோபன் பாசுரங்கள் பாடத்தகாவென்றுதானே, அவன் ஆஸ்தாநத்தில் எழுந்தருளி யிருக்குங்கால் அவற்றை அர்த் தாநுஸந்தாநத்துடன் பாடவேண்டிய முறை பகவத் ஸந்நிதி களில் ஏற்பட்டது? இப்படிக்கெல்லாம் யோசனைகள் உண்டாக, இப்பாசுரங்களைப்பாடப் பாத்யம்கொண்டாடுவதும், பாடும் பாக வதரைப் பலாத்காரமாக விலக்குவதும், இது அத்யாபககோஷ்டி, இதில் நீர் இருக்கத்தகாது, என்று கொண்டு, அஹங்காரத்தி லாழ்வதும், ஒருவரை யொருவர் ஸ்ரீவைஷ்ணவர் என்று கொண்டு கைகளாலும் கோல்களாலும் தாக்குவதும், போலீஸாரைக் கொண்டு வருவதும், அவர் கோஷ்டிகளின் மத்யே ப்ரகாசிக்கக் கைங்கர்யம் செய்கிறதாகப் பாவிப்பதும், "விஶாஷௌசஹிஃஉவ யஷவபஷவிஜிவாநகூவஹிஷஶஶெநஃ, கஹஷஷஸிகஸம்வஷா யாஹிஶெதஃ கஷாவிநாஉக்ஷிதஃ" என்று நமது ஸம்ப்ரதாய உத்கர்ஷத்தையும், "ஸவாஶெவவாயநதயாஜொவஷ ஷவொணஃஶாதள" என்று யதாகதஞ்சித் ராமாநுஜ ஸம்ப்ரதாய ஸ்தரனைவரும் ஒப்புக்கொள்ளப்பட்ட பரம புருஷனை அந்த ஸம் ப்ரதாயம் காட்டிக்கொடுக்குமென்பதையும், மநமறிந்து சொல்லிக் கொண்டு, பகவத் ராமாநுஜனுடைய தர்சநத்தை ஏனையோர்க்குப் பரிஹாஸ விஷயமாக்குவதும், ஆழ்வார் பாசுரங்களின் கார்யமா யிற்றன்றோ? இவை யாவும் ஆழ்வார் நிக்ரஹத்தையும், யதீந்த்ரன் வெறுப்பையும் நம்மவர்க்கு ஸம்பாதித்துக் கொடுக்கமாட்டா

வோ ? இந்த அலங்கோலங்களை ஸம்மதிக்கும் ஆசார்யர்கள் உளர் என்று கருதவும் கூடுமோ ? பகவதபசாரம், பாகவதாபசாரம், அஸஹ்யாபசார மெனப்பட்ட அபராத கோடிகளில் இவற்றைக் காட்டிலும் விலக்கத்தக்கவையுண்டோ ?

**பேரருளாளன்**

இவற்றை நியமேந ஸஹித்துக்கொண்டு, "க்ஷமயா ப்ருதிவீஸம:" என்று மஹர்ஷியால் சொல்லப்பட்டபடித் தனது க்ஷமையின் காஷ்டையை லோகத்தார்க்கு ப்ரகாஶிப்பித்துக்கொண்டு, அமரர் கதிபன் அருள் மிகுநாதன், தமர்கட்குகந்துதனி யரசாளும், கச்சி மாநகரிடம் நமது சித்தம் இந்த வைசாகமெனும் மாஸத்தில் செல்லாமல் நிற்குமோ ? சடகோபன் பாசுரங்கள் அவற்றைப் பாடுவோர் தமக்குள் ஸர்வேந்த்ரிய ஸௌஜந்யாகின்ற அஸூயையை விர்த்திசெய்வதாலும், அவற்றுள் முதல் நூறு பாட்டுகள் வரதன் விஷயமென்று ஆகமாந்தார்யன் திருவுள்ளம்பற்றிய படியாலும், அப்பாசுரங்களும், அவற்றுடன் சேர்ந்து நிற்கும் ஆழ்வார்கள் ப்ரபந்தங்களும், வரதன்முன் அத்யாபகம் செய்பவர்க்குள், அந்த அஸூயையை அந்யத்ர அத்ருஷ்டமான வண்ணம் பரிணமிக்கச் செய்பவையோ ? ஸ்தல மாஹாத்ம்யம் சொல்லும் வண்ணம், ஸத்வப்ரதாநராக ஹிரண்ய கர்ப்பன் இதர தேவதைகளுடன் கூடிப் பகவானுடைய தர்சந நிமித்தமாகச்செய்த யஜ்ஞத்துக்குத் தமோ குண மோஹிதரான அஸுரர்கள் யதாசக்தி விக்நங்களை யுண்டு பண்ணிக்கொண்டிருந்தமையால், தேவாஸுர யுத்தங்களின் மத்யே ஆவிர்பவித்த எம்பெருமான், ஸர்வகாலங்களிலும் தத்ஸமமான யுத்தங்களைக்கலா வைஷம்யதூஷித மநஸ்கரான பூஸுரர்கள் புரிவதைக் கடாக்ஷித்துக்கொண்டு, அதுவும் தன்னுடைய கலி கொலாஹலக்ரீடைகளில் அந்தர்கதமெனத் திருவுள்ளம் பற்றுகின்றானோ ?

**அவன் ஸௌந்தர்யம்**

இஃதிப்படி நிற்கத் தேவாதிராஜன் திருமுகமண்டலத்தின் "ஸஹஸ்ர ஹிம்காவடீரேந க்ஷீராப்தி..." த்தை நிரந்தரமாகத் தர்ஶித்துக்கொண்டிருக்கும் இவர்க்கு மநம் உருகாதோ ? ஆறுவது உத்ஸவம் மத்யாஹ்ந காலத்தில், திருமுகம் தூளிவ்யாப்த

மாய், திருமேனியில் அலங்காரமாக அணியப்பட்ட மலர் வர்க்கங்கள் வாடி, திருவாபரணங்கள் சலிக்க, எம்பெருமான் “[illegible]”, திருவீதிகள் அலங்கரித்துவிட்டு ஆலயம் நோக்கித் திரும்புங்கால், அவனைத் தர்ஸித்த அஸ்மதாசார்யன், இப்படி முகுந்தனை ஸேவித்த பிறகும் உருகாத நெஞ்சம் உளதோ என்று, ஸாதிக்கும்படி இருந்தது. இந்த ஸேவையை உத்தேஸித்தன்றோ, “[illegible] ॥” என்று கோப கந்நிகைகள் தபித்தார்கள். “[illegible] ॥”, என்று நம் வேங்கடநாதார்யன் அநுபவித்த வண்ணம், எம்பெருமானுடைய ஒன்றிற்கொன்று பின்னிடாத பல ஸௌந்த்ர ரூபங்களைத் தர்ஸித்து பராந்தியடையாத சித்தமுள்ளவர் பக்கல் யாமென் சொல்வோம்? “[illegible]” என்று, அவனே மொழிந்தான். அதைத்தான் ஜ்ஞாபிக்கின்றோம்.

அவனது நாமங்கள்

வரம்தருவார்கள் தேவரென்போர். அம்ருதத்தை அபேக்ஷிப்பார்க்கு அவனொருவனே வரதன். ஆதலாலவனே வரதராஜனெனச் சொல்வாகள். “[illegible] ॥” என்று, மற்றோர் தர இயலாத வரத்தைப் பகவானிடம் ப்ரஹ்லாதன் அபேக்ஷித்தபடியால், பகவானையும் வரதர்ஷப னென்று ஸம்புத்தி செய்தான். ஸர்வதேவர்களும், “[illegible]” என்றபடிப் பகவத் பாரதந்த்ரர்களாக இருந்தபோதிலும், இந்த ஏற்றம் ஸர்வதிவ்ய தேசங்களிலுமாவிர்பவித்தபடி அவனுக்குப் பொருந்தும். ஆனால் தேவராஜ

னென விசேஷித்துக் கச்சிமாநகரத்தில் அவன் பிருதடைந்த படியை, அவன் உத்ஸவத்தில் ப்ரத்யக்ஷமாகக் கண்டுகொள்ளலாம். அவனவதார நிமித்தமாகவும் வேறு காரணங்களைக்கொண்டும் பரம புருஷன் அந்த நகரத்தில் பற்பல ரூபம் தரித்துத் திருக்கோவில் கொண்டானாயினும், அந்த எல்லா அவதாரங்களின் தேஜஸ்ஸை யும் பேரருளாளன் ஆகர்ஷித்துக்கொண்டு ஸேவை ஸாதிக்கின்று னென்றால், அந்த ஸ்தலத்தில் விளங்கும் தேவதாந்தரங்களைப் பற்றிக் கேட்பானேன்? இப்படி ஸர்வாதி ஶாயித்வமும், வரத க்ஷபத்வமும், பகவானிடம் ப்ரகாசிக்கும் காரணத்தைச் சிந்திக்கப் புகுந்தாலன்றோ, அவனுடைய மஹாதயாதீஶத்வமும், ப்ரண தார்தி ஹரத்வமும் செம்மை விளங்குகின்றன?

**அவன் விஷய மாக ஆழ்வார் கள் அநுஸந் தானம்**

ஆழ்வார்கள் பகவானைப் பாடினார்களில்லையே என்பாருமுளர் அதனாலென்ன? அது ஆழ்வார்க்குக் குறையோ, அருளாளர்க்குக் குறையோ? இன்னும் ஆழ் வார்கள் பாசுரங்களனைத்தும் நாலாயிரத்துக்குள் அடங்கிவிட்டனவோ? இவற்றைச் சேர்த்த காலம் பல பாசுரங்கள் லுப்தமாயிருக்கக்கூடா தோ? சிலர் ஆழ்வார்கள் காலத்தில் வரதன் திவ்யமங்கள விக்ரஹரூபமாக அவதரிக்கவில்லை யெனவும் சொல் வர். சரித்ர விமர்சையில் ஸமர்த்தர்களனைவரும் ஆழ்வார்கள் காலங்கள் இப்போதைக்கு ஆயிரத்தைந்நூறு வருஷமுதல் ஆயி ரத்துநூறு வர்ஷத்துக்குள்ளென்று நிஷ்கர்ஷித்திருக்கின்றனர். திரு மழிசைப்பிரான் காலமும் திருமங்கை மன்னன் காலமும் காஞ்சீ புரத்தில் பல்லவராஜர்கள் அரசாண்டகாலம். திருமங்கை மன் னன் செங்[illegible]ணனெனும் சோழராஜனையும், வயிரமேகனெனும் ஸேனை[illegible]வனையும், ஒரு பல்லவராஜனையும் தமது பாசுரங்க ளில் ஸ்[illegible]ருக்கின்றார். பெரியாழ்வாரும் நெடுமாரனெனும் பாண்டிய[illegible]ஜனைச் செப்புகின்றார். இந்த அரசர்கள் காலம் நிர்ண யிக்கப்பட்[illegible]ால் ஆழ்வார்கள் காலமும் நிர்ணீதமாயிற்று. இப் போது ஆ[illegible]ம் வருஷங்களுக்குமுன் நாதமுனிகள் இருந்தார்.

ஆளவந்தார் தொள்ளாயிரம் வருஷங்கட்குமுன் இருந்தார். அவருடைய அந்த்யகாலம் ராமாநுஜனுடைய பால்யகாலம். அக்காலத்தில் காஞ்சீபுரத்தல் ஸர்வ பகவத் ஸந்நிதிகட்குள்ளும் வரதன் ஸந்நிதி ஶ்ரேஷ்டமா யிருந்ததென்பது யாவர்க்கும் தெரிந்த விஷயம். அந்தக்காலம் முதற்கொண்டு அதன் ஏற்றம் கொஞ்சமும் குறைந்திலது. திருமங்கை மன்னன் காலத்திற்கும் பாஷ்யகாரர் காலத்துக்கும் ஏறக்குறைய இருநூற்றைம்பது முன்னூறு வருஷங்களே வித்யாஸமாகையால், திருமங்கை மன்னன் காலத்தில் இல்லாத ஏற்றம், அதற்கு நூற்றைம்பது இருநூறு வருஷங்கட்குள், வரதன் ஸந்நிதிக்கு உண்டானவண்ணத்தை நிரூபிக்கும் திறன் யார்க்குமில்லை. பூதத்தாழ்வார் செய்யுளிலும் திருமங்கை மன்னன் பாசுரத்திலும் ஸ்மரிக்கப்பட்ட அத்தியூரான் எனும் தெய்வம் வரதன் அன்றெனச்சொல்ல யார்க்கும் பொருந்தாது. வரதனைப்பற்றிய இதர பாசுரங்கள் ஜீர்ணித்துப்போயிருக்கவேண்டும். இப்படிக்கன்றிப் பெருமாள் கோவிலின் மாஹாத்ம்யம் நன்று விளங்கமாட்டாது.

**அவன் மஹிமை**

பகவான் ஹிரண்ய கர்ப்பன் யஜ்ஞத்தில் ஆவிர்பவித்ததும், அவனுக்கு ப்ரஹ்மாவின் ப்ரதிஷ்டையால் திருக்கோவில் உண்டானதும், உத்ஸவாதிகள் நடந்ததும், காஞ்சீ மாஹாத்ம்யத்தில் விவரிக்கப்பட்டதாக நமது ஜ்ஞாபகம். பின் திருக்கோவிலும் உத்ஸவங்களும் லோபத்தை யடைந்ததாகவும், ஜநமேஜயன் எனப்பட்ட ஓர் அரசன் ஸ்வாமியை மறுபடியும் எழுந்தருளச்செய்து, ப்ரஹ்மோத்ஸவம் கண்டருளப் பண்ணினதாகவும், புராணம் வெளியிடுவதாக நம்முடைய ஜ்ஞாபகம். இந்த ஜநமேஜயன் [illegible] அர்ஜுநன் பௌத்ரன் தானோ, அப்பெயர்கொண்ட மற்றொரு[illegible]னோ என நாமயிர்க்கின்றோம். பாரீக்ஷிதன் அவ்வண்ணம் [illegible]ந்தானாகில் அதன் ஸ்மரணம் பாரத பாகவதங்களில் இருக்க[illegible]வண்டும். ஆதலால் மஹாத்ம்யத்தில் இவ்வுக்தி ப்ரஶம்ஸாபர[illegible] இருக்கலாம். பல்லவராஜ ஶ்ரேஷ்டர்களில் ஒருவன் ஹஸ்தி[illegible]யின்மேல்

பகவானை எழுந்தருளப்பண்ணி யிருக்கலாம். இல்லாவிட்டால் பூர்வம் ஜீர்ணித்துப்போன ஸந்நிதியைப் புதுப்பித்து, உத்ஸவாதிகள் கண்டருளப்பண்ணி யிருக்கலாம்.

ஆனால் சின்ன காஞ்சீபுரம் எம்பெருமான்கள் யார்க்கும் இல்லாதபடி, வரதன் மாத்ரம் பெரிய காஞ்சீபுரம் திருவீதிகளில் உத்ஸவம் கண்டருள்வானேன்? இது ஒரு ராஜன் இஷ்டத்தால் அமைந்ததென்றபோதிலும், அந்த ராஜன் வரதன் விஷயத்தில் மாத்ரம் இவ்வண்ணம் நடப்பானேன்? இதற்கு மாஹாத்ம்யம் காரணத்தைக்காட்டவில்லை. நம்பெரியோர்களும் அதைப்பற்றிச் சிந்தித்திலர். சரித்ரமென்பது அவர் நினைக்காத க்ரந்தம். ஆதலால் மாஹாத்ம்யத்தை அநுஸரித்து நாம் இவ்வண்ணம் அயிர்க்கின்றோம்.

சின்ன காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ந்ருஸிம்ஹமன், யதோக்தகாரீ, அஷ்டபுயத்தார், தீபப்ரகாசர் முதலான எம்பெருமான்கள், பேரருளாளன் அவதார ஸௌகர்யார்த்தமாகவும், அதற்கு ப்ரதிபந்தகமாக வந்த அஸுராதிகளின் நிரஸநார்த்தமாகவும் அவதாரம் செய்தனர் என்றும் மாஹாத்ம்யம் காட்டும். இன்னும் அஸுரர்க்கு ஸஹாயமாய் மாரபரூபம் கொண்டுவந்த மங்கரனும் அஸ்திகிரி குஹாவாஸியான ந்ருஸிம்ஹனால் மாந்தியை அடைவிக்கப்பட்டனரென்றும், அஸுரர்கள் தமது ஜயத்தை உத்தேசித்து மங்கரனை உபாஸிக்கும் நிமித்தமாக ஒரு மாவின் கீழமர்ந்த ஸைகதலிங்கத்தை ப்ரதிஷ்டை செய்தார்களென்றும் காஞ்சிபுராணம் சொல்லும். பெரிய காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் எம்பெருமான்கள் அவதாரத்துக்கும், வரதன் அவதாரத்துக்கும், யாதொரு ஸம்பந்தத்தையும் புராணம் சொல்லவில்லை. அந்த எம்பெருமான்கள் ஒரு பிலத்தின்கண் எழுந்தருளியிருந்த வாமநன் ஸம்பந்தத்ததால் அவதரித்ததாக ஏற்படுகின்றது. அந்த பிலமே வாமநன் திருமேனி யென்றும், ப்ரதக்காக அந்தப்பெருமாளுக்குத் திவ்யமங்கள விக்ரஹமில்லை யென்றும்

சொல்லவொண்ணும். ஆயினும் பிலருபதாரியான வாமநன் தத் ஸமீபத்தில் விக்ரஹரூபமாகவும் எழுந்தருளி நின்ருரென நாம் அத்யவஸிக்கின்ருேம். அந்த எம்பெருமான் மஹாபலியின் ப்ரார்த்தனைக்கிணங்கியும், அவனுடைய அநுக்ரஹார்த்தமாகவும், இப்போது ஊரகமெனப்பட்ட திவ்யதேசத்தில் எழுந்தருளி நிற்கும் எம்பெருமான்களாக ஸேவைஸாதித்ததாகப் புராணம் சொல்லும். ஶங்கரனுடைய ஶாபத்தால் காளியென விரூபத்தையும், பர்த்தாவின் வியோகத்தையும், ஸமகாலத்தில் அடைந்த கௌரீ, தனது நிஜரூபத்தையும், பதியின் சேர்க்கையையும், வேண்டி வாமநனைப் பிலத்தின் ஸமீபத்திலிருந்து உபாஸிக்கவே, அவள் தபஸ்ஸுக்கு உண்டான விக்நங்களை நிவர்த்திக்கவென்று, இதர எம்பெருமான்களாகப் பகவான் அவதரித்தததாகவும் ஸ்தலபுராணம் சொல்லும். இவ்வண்ணம் கீழ்காஞ்சியில் வரதன் ப்ரதாந தெய்வமாக நிற்க, மேல்காஞ்சியில் வாமநன் அவ்வண்ணம் நின்றிருக்கவேண்டும். அந்த வாமநன் ஸந்நிதியும், திவ்யமங்கள விக்ரஹமும் எங்கே? பிலம் மாத்ரம் காமாக்ஷி கோவிலில் இருப்பதாகச் சொல்வார்கள்.

இது விஷயங்களைப்பற்றி ஆலோசிக்கும்கால், வரதராஜனும் வாமநனும் சேர்ந்தே வரதனாக ஸேவை ஸாதிக்கின்றார்கள் என்றும், வாமநனுடைய பூர்வஸ்தாநம் மேல்காஞ்சீயில் இருப்பதால், நூதநமாக மஹோத்ஸவத்தைச் செய்துவைத்த ராஜஶ்ரேஷ்டன், பெருமாளுக்கு மேல்காஞ்சீயினுடைய திருவீதிகளில் உத்ஸவம் கண்டருப்பண்ணினன் என்றும், பெருமாள் அநுக்ரஹத்தால் தன் ரூபத்தையும், பதிஸாமீப்யத்தையும் அடைந்த ஹைமவதிக்கும், அவளுடைய பதியான ஈஶ்வரனுக்கும் எம்பெருமான் தன் அநுக்ரஹ பரீவாஹரூபமாகவே, தன் உத்ஸவகாலத்தில் அவர்கள் ஆலயத்துக்கு முன்னல் ஸேவைஸாதிக்கின்ருனென்றும், பகவான் வாரணாத்ரி ஶிகரஸ்தனாக நிற்பதையிட்டு, மஹாகஜத்தின் மீது எழுந்தருளுங்கால் அவ்வண்ணம் ஸேவைஸாதிக்கின்ருனென்றும், இதன் உண்மையை அறியாத அஜ்ஞாந பலத்தால், இந்த ஸந்தர்ப்பம் பின் காலத்தில் ஏசலாக முடிந்ததென்றும், வர்ம

னன் ஸந்நிதியில் குற்றேவல்செய்த ஓர் ராஜகந்நிகையானவள், பெருமாள் பிலத்தைவிட்டு மலையாள எழுந்தருளவே, தானும் அவனுடன் கீழ்காஞ்சி சென்று அவன் ஸந்நிதியில் கைங்கர்யம் செய்து, மலையாளன் நாச்சியாரெனப் பெயர்பூண்டனன் என்றும், இப்படி இரண்டு காஞ்சியிலும் ப்ரதாநமாக ஏற்பட்ட இரண்டு அர்ச்சாவதாரங்களும் ஒருமித்து, அந்யத்ர அத்ருஷ்டமான ஏற்றத்தைத் தேப்பெருமாளுக்கு உண்டாக்கினவென்றும் அயிர்க்கின்றோம்.

இப்படிப்பட்ட எம்பெருமானை அநுபவித்துக்கொண்டு, அவன் திருவடிகளில் கைங்கர்யம் செய்துகொண்டு, த்ரிதசாளுடைய ஆநந்தத்தை இவ்வுலகிலே அடைந்துகொண்டு, காலம் போக்குவதைவிட்டு, அவன் முன்னால் அபராத பரம்பரைகளைப் பெருக்கிக்கொண்டு, ஆத்மத்ரோஹம் புரிபவர் ஸங்க்யை பெருத்ததாக எண்ணுகின்றோம். அர்ச்சாவதார தசையில் பகவந் நிக்ரஹம் ப்ரத்யக்ஷத்தில் தெரியமாட்டாது. சாஸ்த்ரமறிந்து தான் அதனிமித்தம் அஞ்சவேண்டும். ஆகிலும் ஸ்தலாந்தரங்களைக்காட்டிலும் பெருமாள் கோவிலுக்கு ஓர் அதிசயம் உளது. பாகவதருடைய ஸத்பாவம் அந்நகரத்தில் அத்யாபி சைதில்யத்தை அடைந்திலது. "ஸதாஸம்ஸாதநவாஸம்தி" என்று, இதுவரையிலும் பெருமாள் கோவிலைப்பற்றி வருத்தப்படவேண்டாம். ஆசார வர்ஜிதமானதும், விபரீதமானதுமான துர்புத்தி ஜநங்களில் பெரும்பாலோர்க்கு உண்டாகுமாகில், அவர் ஸத்துக்களை அநுவர்த்திகாததே அதற்குக் காரணமாகும். இந்தக் குணம் அந்த மஹாஸ்தலத்தை விடாதபடிப்பேரருளாளன் க்ருபை பண்ணவேண்டும்.

# தத்வவிசாரம்.

## அவதாரரஹஸ்யமும் அர்ச்சாவதாரவைலக்ஷண்யமும்.

ஆதலால் அவதாரகாலங்களில் பகவானைத்தர்ஶித்த யாவரும் மஹாபாக்யஶாலிகள். அவனைக் கண்டகண்கள் மற்றொன்றைக் காணா; அவன் கதைகளைக் கேட்ட செவிகள் மற்றொன்றைக் கேட்காவாம்; இவ்வண்ணம் அவன்ரூபமும் சரித்ரமும் குடிகொண்ட மநங்கள் மற்றோர் சிந்தைக்கு இடங்கொடுக்குமோ? அந்தப் பாக்யம் நமக்கிலது. பின்னகாலத்தினர்க்கு, தாத்ருஶ தர்ஶநமும், ஶ்ரவணமும், த்யாநமும் அவனுடைய திவ்யமங்கள விக்ரஹங்களால் உண்டாக வேண்டும். இதை யோசித்துத்தான், ஸர்வேஶ்வரன் ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தில் பாஞ்சராத்ரம் முதலான ஆகமஶாஸ்த்ரங்களை ப்ரவர்த்திப்பித்தான். ஆழ்வார்களும் ஆசார்யர்களும், அந்யவைதிகஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்களும், அநேக மஹான்களும் மஹர்ஷிகளும், பகவானுடைய திவ்யமங்களவிக்ரஹங்களில் ஈடுபட்டு முக்தியடைந்தார்கள். தேஶிகனும், "ஆழ்வார்களும், இவ்வவதாரரஹஸ்யத்தையும், அர்ச்சாவதாரவைலக்ஷண்யத்தையும் ப்ரசுரமாக அநுஸந்தித்து, இதற்குப் பேரணியாகப் பரத்வத்தைக்கண்டு போந்தார்கள்" என்றருளிச்செய்தார். இதன்பொருள் வ்யாக்யாநப்படி என்னவென்றால், "இப்படி அவதாரரஹஸ்யமும், அர்ச்சாவதாரமும் ஆயாஸமின்றி மோக்ஷத்தைத் தரவல்லன. இப்படியே ஶௌநகாதி மஹர்ஷிகள் உபதேசித்தார்கள். ஜந்மாந்தரங்களில் மோக்ஷம்பெறுவதாகின்ற விளம்பத்தை ஸஹிக்காத ஆழ்வார்கள் பகவானை அநுபவித்ததஶையிலும் ஆஶ்ரயணதஶையிலும் அவதாரரஹஸ்யத்தையும், அர்ச்சாவதாரவைலக்ஷண்யத்தையும் மிகவும் அநுஸந்தித்தனர். பகவானுடைய பரரூபத்தை அவ்வளவாக அநுஸந்தித்தாரில்லை. தமது அநுஸந்தாநத்துக்கு மூலபலமாகப் பகவானுடைய

பரரூபத்தைக் கண்டமாத்ரமத்தனே போக்கி, அர்ச்சாவதாரத்தைப் போலே அதை ப்ரசுரமாக அநுஸந்தித்தாரில்லை." என்றுகின்றது. பேரணியென்றால் மூலபலம்; முன்னே ஸேனை செல்ல அதற்கு ஸஹாயமாகப் பின்னே செல்லும்படை. பரரூபத்தைத் தர்ஸித்தாரென்பது திண்ணம். ஆகிலும் அதை ஆதாரமாகவைத்துக்கொண்டு, ப்ரசுரமாக அவதாரசரித்ரங்களையும் அர்ச்சாமூர்த்திகளையும் த்யானித்தனர். நான் அப்ரமேயனைத் தொழுகின்றேன்; நீர் விக்ரஹங்களை வணங்குகின்றீர்கள்; என்று சில மந்தமதிகள் இக்காலம் ப்ரலாபிக்கும் வண்ணம், ஜ்ஞாதாக்களான ஆழ்வார் ஆசார்யர்கள் செய்தாரில்லை. லோகஸங்க்ரஹம் அவர்க்குத் தெரியும். ஆதலால் ப்ராயேண மநுஷ்யர் பரரூபஸாக்ஷாத்காரத்தில் அநர்ஹர் என்பதை நினைத்து, அவர்க்குப் புத்திபேதம் உண்டாகக்கூடாதெனத் தாமும் அவதாரசரித்ரங்களிலும் அர்ச்சாநுஸந்தாநத்திலும் விசேஷமாக ஈடுபட்டார்கள் என்பது ஸ்பஷ்டம்.

இப்படித் தேசிகன் ஸாதித்தபடியை யோசித்தால், ஆழ்வார்கள் அர்ச்சையில் பகவத்ஸாக்ஷாத்காரம் செய்ய இடங்கொடுத்தது பகவானுடைய அவதாரசேஷ்டிதங்கள் என்பது நிஸ்ஸம்சயமாக ஏற்படுகின்றது. அவன் பக்தர்களுக்கிரங்கி அவரால் அநுபவிக்கப்பெற்ற அப்ராக்ருதசரீரங்களை ஸ்வஸங்கல்பத்தால் ஸ்வீகரித்தவண்ணம், அவனவதார சரித்ரங்களை ஸ்மரித்து ஸ்மரித்து, அவன் திருவடிகளில் கைங்கர்யம் பண்ண இச்சிப்பவர், தாமுகந்தபடிச் செய்துகொண்ட அர்ச்சைகளில், அவனது ஸங்கல்பத்தால் அவன் ஸாந்நித்யம் செய்யவும் குறையில்லை; ஸாந்நித்யம் செய்து தன்னடியாரை அநுக்ரஹிக்கவும் குறையில்லை. அவன் அவ்விதம் ஸாந்நித்யம் செய்கின்றானென்றும், அநுக்ரஹிக்கின்றானென்றும் விச்வஸித்து அடிமை செய்தாரை அவன்கைவிடுவன் என்கை பகவானுடைய ஸ்வபாவத்தை அத்யந்தம் அறியாமையைக் காட்டுகின்றது. இப்படிப் பகவதநுபவம் செய்த பஹுமஹாத்மாக்களை நினைக்குங்கால், அவர் யாவரும் மோசம் போயினர்; ஈச்வரன் அவர்க்கு இரங்கமாட்டான்; விக்ரஹங்களைச் சேதிக்கும் நான்தான் ஜ்ஞாநி என்றுபரர் சொல்வதைக் கேட்டு நம்மவரும் அநேகர் மயக்குண்டா

ரல்லவோ? வாங்மநஸங்களுக்கும் இது இத்தகையது என்று எண்ணவும் இடங்கொடாது நிற்கும் பரனை வணங்குகின்றோம் என்பது வாய்ச்சொல்லின்மேல் அர்த்தம் கொள்ளாது. அந்யருடைய பக்த்யதிஶயத்தை அறியத்திறனற்று, அர்ச்சைகளையும், அவற்றின்மூலமாகப் பகவானை வழிபடுபவரையும் நிந்தித்தல் பாபகோடிகளில் சேரும், என்பதற்கு ஸந்தேஹமில்லை.

ஹேதுவாதிகள் அவதாரங்களையும் தத்பரயுக்தமாக வழங்கும் பகவத்கதைகளையும் நம்புகின்றாரில்லை. நம்புகின்றவரைப் பார்த்து, அவைசரித்ரமல்ல எனவும் சொல்வர். இவை சரித்ரமென யாம் சொல்லப் போகின்றோமில்லை. தத்காலம் சரித்ரங்கள் எழுதுகின்ற விதம் அவதாரஸம்பந்தமாகச் சரித்ரம் யாரும் எழுதினார்களில்லை. இன்னும் ராமாவதாரகாலங்களிலும் க்ருஷ்ணாவதாரகாலங்களிலும் நமது நாட்டில் எழுத்தே இல்லையென்பாருமுண்டு. ஆதலால் சரித்ரங்கள் இல்லை என்பது தூஷணையாகாது. "ஜஹ்ம்வெத்ஹா த்தாந:" என்பதுபோல், அவதாரரஹஸ்யத்தைத் தமது யோகஶக்தியால் ஸாக்ஷாத்கரித்த மஹர்ஷிகள் இருந்தார்கள். அவனுடைய அதிமாநுஷ சேஷ்டிதங்களைக் கண்ட பக்தர்களும் இருந்தார்கள். இவர்கள் மூலமாகத்தான் அவதாரசரித்ரங்கள், பரம்பரையாகக் கதையாகப் பெருகின. வால்மீகி, வ்யாஸர் முதலான மஹான்கள் லோகோபகாரமாக இந்தச் சரித்ரங்களை க்ரந்தங்களாக இயற்றினார்கள். இக்ரந்தங்களில்விளங்கும் ஒவ்வொரு சரித்ராம்ஶமும் உண்மையோ என்று, சரித்ரமெழுதுவதில் குஶலர்கள் வினவக்கூடும். இந்த ஸம்ஶயம் பக்தனுக்கு உதிக்க அவஸரமில்லை. கதைகளெல்லாம் கதாபுருஷன் அநுபவமொன்றைப் பற்றியே பக்தனுக்கு உதவுகின்றன. ஸ்ரீ பாகவதம் படித்து, அந்யத்ர அத்ருஷ்டமானபடிப் பகவத்பக்தியையும் இதரவிரக்தியையும் ஒருவன் ஸம்பாதிக்கையில், அப்புராணகதைகளின் உண்மையைப்பற்றி அவன் என் தன் மநஸ்ஸை க்லேஶிக்கச் செய்வன்? புராணத்தின் கருத்தோ "ஹரிவிரஹித ஷ்டீரவஶேதந" என்று, ப்ரக்யாதியாக யாரும் அறிவர். கல்நெஞ்சனாய் ஒருவன் நின்றாலன்றிப் பாகவதம் படித்துப் பகவதநுபவம் செய்யாதொழியான். ஆழ்வார்கள் பாசுரார்த்தங்களைச் சிந்தித்து மநம் உருகுங்கால், அவர் ப்ரஸ்தாபிக்கும் பக

வத்கதைகள் வாஸ்தவமா என்று எந்த ஆஸ்திகன் யோசிக்கப் போகின்றான்? கோவிலில் சென்று திவ்யமங்கள விக்ரஹத்தைத் தர்ஶித்து, “ நிரந்தரம் நிர்விஶேஷஸ்பிருஹணீயம், ஸுமூர்த்தி விம்சாவஹ சாஹிர ஞ்சவர்ம் । ஸுதர்ம்ஸம்ஸ்தான வாரணஸௌந்தர்யாய, நெவகோமு வாம்ஸவி நம்ஸ்ஸிமோவ: ॥ ” என்று பகவானை அநுபவிக்கும் கால், இந்த விக்ரஹத்தில் பகவான் ஸாந்நித்யம் செய்வனு, இது கல்லன்று, என்று யோசிப்பவனும் உளனோ? கல்லென்பார்க் குக் கல்தானகப்படும். சரித்ரமா என்று ஶோதிப்பார்க்கு ஸந் தேஹமோ அவிஶ்வாஸமோதான் பலிக்கும். “ யெயயாமாம் ப்ரபத்யந்தெ தாம்ஸ்தமெயெவ ஹஜாம்யஹம் ” எனும் பகவத்வசந மும் அவர்க்கு வீணேயாம். பகவானைக் காணத்திறனற்று, அநு பவிக்க வழியற்று, கண்டாரையும் அநுபவித்தாரையும் நிந்தித்த பயனுக, உண்மையில் நாஸ்திகராவார் பலர்.

பக்தர்க்கு அவதாரகதைகள் உண்மையா யில்லாவிட்டாலும் ஆகவேண்டியதென்ன? அவற்றின் பயன் அவர்மட்டும் அவ னுடைய த்யாநமும் அநுபவமுமே. கதைகள் எப்படியானுலும் ப்ரயோஜநம் துல்யமே. ஸம்ஸாரமாகின்ற தீக்கடலில் மூழ்கித் தபிப்பவர்க்கு, “ தவகதாம்ருதம் தப்தஜீவநம் கவிபிரீடிதம் கல்மஷாபஹம் ” எனும் ப்ரகாரம், பகவத்கதைகள் பாபங்களைப் போக்கி, ஸ்வரூபப்ராப்தியைக் கொடுக்குமென்பதில் கிஞ்சித்தும் ஸந்தேஹமுண்டோ? கதையைக் கேட்பவர் ஹ்ருதயமலர்மிசை யவன் ஏகினுனென்றார் திருவள்ளுவர். அவன் அங்கு நிலைக்க, அவர் பாபங்கள் நிலைக்குமோ? பாபம் நஶித்தால் ஸ்வரூபம் தானே ப்ராப்தமாகும். அவதாரங்களே பொய்யென்பர். ஆனு லென்ன? உபநிஷத்வித்யைகளில் எந்தெந்த ரூபகுணவிஶிஷ்ட னுகப் பகவான் உபாஸிக்கப்படுகின்றானே அந்தந்த ரூபகுண விஶிஷ்டனுகவே ப்ராப்யதஶையில் அநுபவிக்கப் படுகின் றான், என்று முறையிட்டிருப்பதை யேன் எண்ணக்கூடாது? “ யெயயாமாம் ப்ரபத்யந்தெ ” என்கிற ஶ்லோகார்த்தம்

வீணுமோ. ஸ்ரீராமனுக த்யாநிப்பவர்க்கு ஸ்ரீராமன் திருவுருவு கொண்டும், ஸ்ரீக்ருஷ்ணனுக த்யாநிப்பவர்க்கு ஸ்ரீ க்ருஷ்ணரூபம் தரித்தும் ப்ரஸந்நமாகின்ருன் ஈஶ்வரன். அவன் அவ்வண்ணம் அடியார்க்கு இரங்குவதைத் தடுப்பாருமுண்டோ? அர்ச்சாரூபியாய் உபாஸிப்பவர்க்கும் அவனருள் திண்ணமென்பது ஏகலவ்யன் வ்ருத்தாந்தத்தை ஸ்மரித்தால் விளங்கும். கதைகள் பொய்யானுலும் அவற்றின் சிந்தனையால் ஜநிக்கும் ஜ்ஞாநம் வாஸ்தவம். ஜ்ஞாநமன்ருே முக்திகாரணம். பக்திரூபமடைந்த ஜ்ஞாநம் நிலைத்தபிறகு பகவத்ப்ராப்திக்கு ப்ரதிபந்தகம் உண்டோ? 'மஞே ஹஸ்தஃ வ்ருணஶ்ருதி' எனும் வாக்யம் பொய்யாமோ? பக்தியுண்மையானல், அது உண்டாக உதவிய கதைகள் உண்மையல்லவென்று ஈஶ்வரன் வெறுப்பனே? பக்தி யுண்மையாகில் அதனுடைய பரீவாஹமாகச் செய்யப்பட்ட ஆராதநங்கள் ஹேதுவாதிகள் சொல்லுகிறபடி இல்லையென்று ஈஶ்வரன் பராங்முகமாவனே? என் ஜாநகீரமணு எனது மனுவைக் கைகொள்ளும், என்று ஒருபக்தன் கதறினுல், நான் ஜாநகீரமணனன்று, பொய் சொன்னுய்; மனு ஸரியான கடுதாசியில் எழுதவில்லை; கடுதாசி மடித்தது பிசகு; ஸ்டாம்பு ஸரியாயில்லை; கையெழுத்தில்லை; என்று கோர்ட்டு சிரஸ்ததாரனென ஈஶ்வரன் பக்தனை த்யஜிப்பனே? ஸ்வமதாபிநிவேசத்தினுல் அந்யமத தூஷகர்களுக்கு இவை ஸாது யோசனைகள். கருணுஸமுத்ரமான பரமேஶ்வரன் உபாஸநா ப்ரகாரசிந்தையில் ஆழ்வனே? தன்னடியார் குற்றம் செய்யார்; செய்தாரேல் நன்று செய்தார்; என்றல்லோ அவன் நினைப்பான். இந்த யோசனைகள் போதும். முன் மதம் நன்றிருந்தது. இப்போது கெட்டது: எனும் மூடயோசனையும் வேண்டாம். பகவத் பக்தர் எக்காலுமுளர். நமது தர்ஶநங்கள் நன்கே வளர்ந்தன; ஸர்வலோகஹிதத்தை வேண்டியே மஹாநுபாவர்களால் விர்த்திசெய்யப்பட்டன. குற்றம் காண்போர்க்குக் குற்றம் தான் புலப்படும். குறையொன்றுமிலையெனக் கொண்டு அவனுக் காட்செய்பவர்க்கு அவனருள்கிடைக்கும்.

## மோக்ஷோபாயங்கள்.

மோக்ஷமென்பது ஸ்வரூபப்ராப்தி. நமது ஸம்ப்ரதாயப்படி ஈச்'வரனொருவனுக்கே நாம் சேஷராக இருக்கும் நிலைமையை அடைதல். ஸ்வரூபம் என்பது யோசனுபேதங்களுக்கு இடங் கொடுத்தபோதிலும், அதன் ப்ராப்தி மோக்ஷம் என்பது ஸர்வ ஸம்ப்ரதாயங்களுக்கும் பொது. இதை அடைவதற்கு ஈச்'வர ப்ரஸாதம் முக்யஹேதுவானாலும், ஈச்'வரன் வைஷம்ய நைர்க்ருண்ய ரஹிதனனபடியால், ப்ரஸாதார்ஹருக்கே ப்ரஸாதம் செய்கின்றான். அந்த அர்ஹதையும் உபாஸகருடைய சித்தபரிபாகத்தை ஆச்'ரயித்திருக்கின்றதாகையால், அதைமாத்ரம் பகவான் சிந்திப்பனேயன்றி, அதற்குப் பரம்பரையாகக் காரணமாக நின்ற கதைகளின் தத்வாம்சத்தைப்பற்றி அவன் விசாரிக்கமாட்டான். அது எந்தரூபமான ஆராதனுதிகளால் ப்ரகாசிக்கின்றதோ, அவற்றின் க்ரமத்தையும்பற்றிச் சிந்திக்கமாட்டான். பக்தியோகம், வாக்யார்த்தஜ்ஞானம், ப்ரபத்தி, கேவலபக்தி, பாகவதஸம்ச்'ரயம் சேஷத்வஜ்ஞானம், இந்தவிதமாக மோக்ஷகாரணங்களைப் பலவிதமாக மோக்ஷார்த்திகள் யோசித்தபோதிலும், அந்தந்த ஸம்ப்ரதாயஸ்தர், அவ்வவர் ஸம்ப்ரதாயங்களில்,மோக்ஷோபாயமாகவோ, பகவத்ப்ரஸாதத்தை அடைவதற்கு வ்யாஜமாகவோ, மற்றெந்த பெயராலோ விவரிக்கப்பட்ட சித்தபரிபாகங்களில் ஒன்றை அடைந்தாராகில், அவையாவும் ஏறக்குறைய ஏகரூபமாகத்தான் நிலைக்க ஏற்படும். சித்தபரிபாகம் என்றால் கேவலஜ்ஞானமன்று. வேதாந்த க்ரந்தங்கள் மிகவும் நன்றாகப் படித்தவர் பலர், அவர் அறிந்தவற்றைத் தமக்கு உபயோகப்படுத்தாமல், அதைப்பரோபகாரமாகவே விநியோகிக்கின்றனர். இவர்க்கு நற்கதியுண்டாகாது. ஜ்ஞானம் நிலைத்தபடியே அநுஷ்டானமும் உண்டாகவேண்டும். இந்த விதமான சித்தபரிபாகம் கிடைத்ததாகில், ஒருவன் எந்த ஸம்ப்ரதாயநிஷ்டனானாலும், பகவத் க்ருபைக்குப் பாத்ரனுவான். தன்னுத்மாவுக்கு அவித்யை நிவர்த்தித்த பின்னுண்டாகும் அதனுடைய சுத்த ஸ்வரூபமே ப்ரஹ்மம் என நினைத்து அதை

யடைந்தவர்க்கும், மோக்ஷத்திற்கு உபாயமாகவோ, பகவத்க்ருபைக்கு வ்யாஜமாகவோ கொண்டமார்க்கத்தில் குறையற நின்றவர்க்கும், "யதா ஸர்வே ப்ரமுச்யந்தே காமா யேऽஸ்ய ஹ்ருதி ஶ்ரிதா: । அத மர்த்யோऽம்ருதோ பவதி ॥ யதா ஸர்வே ப்ரபித்யந்தே ஹ்ருதயஸ்யேஹ க்ரந்தய: । அத மர்த்யோऽம்ருதோ பவதி ॥" எனும் உபநிஷத்வாக்யார்த்தங்கள் கைகூடலாம். ஹ்ருதயத்தைப் பற்றி யிருக்கின்ற ஐஹிகவிஷய காமங்களும் கட்டுகளும் நிவர்த்தித்தால், உற்றது வீடு எனக்கூடும். ஒருவன் கொண்ட வழியில் பரமம் ஸாம்யம் அவனுக்குக் கிடைக்காவிட்டாலும், அது கிடைக்கும் வழிகளில் யாதேனு மொன்றிலாவது அவன் நிலைப்பான். ஆனபடியால் நமது ஸம்ப்ரதாயப்படி மோக்ஷோபாயமாக நமது ஆசார்யர்கள் நிச்சயித்த ஶரணாகதியின் ப்ரபாவத்தைப்பற்றி நாம் விசாரிக்கப் புகுவதில், தர்ஶநாந்தரஸ்தர் விஶ்வாஸங்களை நாம் பழிப்பதாக எண்ணுதல் ஒண்ணாது.

## ப்ரபத்தி.

"தமேவம் வித்வாந் அம்ருத இஹ பவதி । நாந்ய: பந்தா அயநாய வித்யதே ॥" என்றும், "தமேவ விதித்வா அதிம்ருத்யுமேதி । நாந்ய: பந்தா வித்யதேऽயநாய ॥" என்றும் ஶ்ருதி அறுதியிட்டிருக்கின்றது. இதனால் ஶ்ருதியால் நிர்திஷ்டமானபடிப் பகவானை அறிந்தவர்தான் மோக்ஷத்தை அடைவர்கள் என்பது ஶ்ருதிப்ரஸித்தம். அந்த அறிவைத்தான் வேதநமென்றும் உபாஸநமென்றும், பக்தியென்றும், பக்தியோகமென்றும் சொல்வார்கள். அதன்ஸ்வரூபத்தைப்பற்றி முன்விஸ்தாரமாக விசாரித்தோம். மோக்ஷத்துக்கு வேறுவழியில்லை யென்றும் மேலெடுத்த ப்ரமாணங்கள் சொல்கின்றன. அப்படியிருக்க வேறு உபாயம் கல்பிக்கக்கூடுமோ என்று சோத்யம் பிறக்கலாம். ப்ரபத்தி எனும் ந்யாஸவித்யையானது மநுஷ்யர்களால் கல்பிதமன்று. அதுவும் ஶ்ருதி ப்ரஸித்தங்களான வித்யைகளில் அந்தர்கதம். ஶ்வேதாஶ்வதரோபநிஷத்தில், "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ஶ்ச

𑌪𑍍𑌰𑌹𑌿𑌣𑍋𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑍈 । 𑌤𑌂 𑌹 𑌦𑍇𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌂 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌵𑍈 𑌶𑌰𑌣𑌮𑌹𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥" "யாதொரு பகவான் தனது நாபியினின்று ஹிரண்டகர்ப்பனை ஸ்ருஷ்டித்து, அவர்க்கு வேதத்தை அளித்து ஜகத்ஸ்ருஷ்டி யோக்யதையை உண்டுபண்ணினரோ, மோக்ஷோபயோகியான தன்விஷய ஜ்ஞானத்தை ஸ்வாநுக்ரஹத்தால் தருகின்ற அந்த ஜ்யோதிர்மயனான பரமாத்வை நான் கேவலம் மோக்ஷத்தை அபேக்ஷித்தவனாய்க்கொண்டும், பலாந்தரங்களை அபேக்ஷிக்காமலும் ஶரணமடைகின்றேன்", என்கிறவாக்யம் உளது. அதன்பொருள், நமது ஸம்ப்ரதாய பாஷ்யத்தையும் ஶங்கராசார்பாஷ்யத்தையும் அநுஸரித்து இங்கு வெளியிடப்பட்டது. இந்த ஶ்ருத்யர்த்தத்தை அநுஸரித்த,

𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌤𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌭𑌜𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 ।
𑌦𑌦𑌾𑌮𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 𑌤𑌂 𑌯𑍇𑌨 𑌮𑌾𑌮𑍁𑌪𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 ॥
𑌤𑍇𑌷𑌾𑌮𑍇𑌵𑌾 𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌾𑌰𑍍𑌥𑌮𑌹𑌂 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑌂 𑌤𑌮𑌃 ।
𑌨𑌾𑌶𑌯𑌾𑌮𑍍𑌯𑌾𑌤𑍍𑌮 𑌭𑌾𑌵𑌸𑍍𑌥𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑍀𑌪𑍇𑌨 𑌭𑌾𑌸𑍍𑌵𑌤𑌾 ॥

"என்னிடம் நிரந்தரயோகத்தை ப்ரார்த்தித்தவர்களாய் பஜிக்குமவர்களுக்கு, எந்த ஜ்ஞானத்தால் அவர்கள் என்னை அடைவார்களோ, அந்தப் பரிபாகதசையை யடைந்த ஜ்ஞானத்தை நான் ப்ரீதிபூர்வகமாகத் தருகின்றேன். அவர்களுக்கு ஶ்ரேயஸ் உண்டாக வேண்டுமெனும் தயாஹேதுவால், நான் அவர்களுடைய மநோவ்ருத்தி விஷயமாக இருந்துகொண்டு, எனது கல்யாணகுண விஶிஷ்டதிவ்ய மங்களவிக்ரஹத்தை அவர்களுக்கு ஆவிஷ்கரித்தவனாய்க்கொண்டு, அவர்களுடைய ப்ராசீநகர்மரூபமான அவித்யையால் உண்டானதும், எனது ப்ராப்திவிரோதியாயிருப்பதுமான அஜ்ஞானமெனும் இருளை ப்ரகாஶிக்கின்ற என்னைப்பற்றிய ஜ்ஞானரூபமான விளக்கால் போக்கடிக்கின்றேன்." எனும் பகவத்கீதா ஶ்லோகங்கள் இவ்விடம் ஸ்மரிக்கத்தக்கன. பஜதாம் எனும் சப்தத்துக்கு ஸேவமாநாநாம் என்று ஶங்கராசார்யர் வ்யாக்யாநத்

செய்கின்றார். ப்ரீதிபூர்வகம் எனும் சப்தங்களுடன் அதைச்சேர்த்து அர்த்தம் செய்தால் கேவலம், பகவானிடம் ஸ்நிக்தராய், அவனுடைய கைங்கர்யம் செய்பவர் என்றாகின்றது. ஶரணாகதி என்பதும் இத்தகையதோர் ஜ்ஞாநவிஶேஷம். பகவான் தன்னடியார் ஸேவையை உகந்து, அவரிடம் ப்ரஸந்நனாகி, அவர் ஹ்ருதயத்தில் நின்று, அவருடைய அஜ்ஞாந நிவ்ருத்திபூர்வகமாக, ஸ்வவிஷய ஜ்ஞாநத்தை யவர்க்கு அளித்து, அவரைத் தன்னிடம் வரும்படிச் செய்கின்றானென்பதை வெளியிடும் கீதாவாக்யங்களுக்கு இணங்க, பக்தனான ஓர்புருஷன் இதர விரக்தி பூர்வகமாக, அவனுடைய ப்ராப்தி யொன்றையே அபேக்ஷித்தவனாய்க் கொண்டு, அவனைச் சரணமடைந்தானாகில், அவனுக்கு ஸர்வேஶ்வரன் ஸ்வவிஷய ஜ்ஞாநத்தை ப்ரகாஶிப்பித்துத் தன் ஸாயுஜ்யத்தை அளிக்கின்றான் என்று உபநிஷத்கூறியது. ஆதலால் உபநிஷத் வித்யைகளில் ஶரணாகதியும் ஒன்று. ஸ்வவிஷய ஜ்ஞாநம் என்றால், ஸமஸ்த கல்யாணகுணோபேதமான பகவத்திவ்ய மங்கள விக்ரஹ தர்ஶநம், என்று ராமாநுஜன் வ்யாக்யாநம் செய்கின்றார். இந்த ரூபஸாக்ஷாத்காரத்தைத்தான், பகவான் தன்பக்தர்களுடைய மநோவ்ருத்தி விஷய மாகின்றாரெனச் சொன்னதாகவேண்டும். இது ஶரணாகதியின் பலனாகப் பக்தியோக நிஷ்டனுக்கு உபாஸந வேளையிலும், ப்ராப்ய தசையிலும், ஸ்வதந்த்ர ப்ரபத்திநிஷ்டனுக்கு, இங்கே உத்தரக்ருத்யத்திலும், ப்ராப்ய தசையிலும் ஸம்பவிக்கும். இரண்டுக்கும் ஶாஸ்த்ர ஜ்ஞாநம் நியமேந பூர்வவ்ருத்தம். அதுதான் ஒருபுருஷனை மோக்ஷோபாயாநுஷ்டாநத்தில் ப்ரவர்த்திப்பிக்கச் செய்கின்றது. முன்னெடுத்த கீதா ஶ்லோகங்களில் ஶரணாகதி சப்தம் கண்டோக்தமாய்ச் சொல்லாமல்போனாலும், அதில் அதிகாரிகளுடைய அநுபவத்தை அவற்றிற்கு முன்வரும், [illegible] எனும் ஶ்லோகத்தால் பகவான் விவரித்திருக்கின்றார். கீதா ப்ரகரணாந்தரத்தில், தமேவ ஶரணம் கச்ச ஸர்வபாவேந பாரத । தத்ப்ரஸாதாத் பராம் ஶாந்திம் ஸ்தா

நம் வ்ராஷூ்ஷி ஶாஷூசம் ॥ எனும் ஶ்லோகத்துக்கும், ஸாதா ரணமாக ப்ரகாசிக்கும்பொருள், தத்பூர்வஶ்லோக நிர்திஷ்டனுன அந்தர்யாமியும், கர்மாநுகுணமாக ப்ராணிகளை ஸம்ஸார சக்ரத்தில் ப்ரவர்த்திப்பித்துக்கொண்டு மிருக்கிறவனுமான ஸ்ர்வேஶ்வரனை, ஸர்வாத்மநா ஶரணமடைந்தால், அவனுடைய ப்ரஸாதம் உண்டாய், அவனது ஸர்வோத்தமமானதும், ஸர்வசர்ம பந்தோபஶமமானதும், நித்யமானதுமான வைஷ்ணவம் பரமபதம்கிடைக்கும் என்கின்றது. ஸ்தலாந்தரத்திலும், ஷஷ்டீநாம் ஜநூநாம் ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே, என்பதால், இந்த ஸர்வஜகத்தும் வாஸுதேவாத்மகம் என்றறிந்தவன், அநேக ஜந்மாவஸாநே அந்த ஜ்ஞாநத்தை அடைந்து, மோக்ஷார்த்தம் பகவத் ப்ரபதநம் செய்கின்ருன், என்று ஏற்படுகின்றது. இப்படிப் பகவத் ஶரணகதியை ஸுஹ்ருதம் ஸுஹ்ருத்தமம் ஜ்ஞாநம் என்று, ஸ்ரீக்ருஷ்ணன் தமேவ ஶரணம் வ்ரஜ என்னும் ஶ்லோகத்தின் பின்னுல் உரைக்கின்ருர். பூர்வம், தானே அந்தர்யாமி எனும் உண்மையை ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட: என்று அருளிச்செய்திருந்தும், அந்தர்யாமியை ஈஶ்வர சப்தத்தால் சொல்லி, மறுபடியும்தானே ஈஶ்வரன் எனும் ஜ்ஞாநதார்ட்ய நிமித்தமாக, ஸர்வதர்ம பரித்யாக பூர்வகமாகத் தன்னையே ஶரணமடையும்படியாகப் பகவான் அர்ஜுநனுக்கு முடிவாக உபதேசித்து, அந்த ஶரணகதியின் பலனுகத் தனதுக்ருபையால் ஸர்வபாபக்ஷயத்தையும் காட்டியருளினுர். பாபம் க்ஷயித்தால் மோக்ஷம் பலிக்கும் என்பது அர்த்தாத்ஸித்தம். ஆதலால் பகவத்ஶரணகதி யெனும் வித்யாவிஶேஷமானது உபநிஷத்தில் குறிக்கப்பட்டும், பகவானுல் கீதையில் பலதரமும் விதிக்கப்பட்டுமிருக்கின்றது. இப்படிக்கீதையில் விதிக்கப்பட்டது பக்தியோக நிஷ்டனுக்கு அங்கப்ரபத்தியாகவும், அகிஞ்சனுக்கு ஸ்வதந்த்ர ப்ரபத்தியாகவும் முடிகின்றது. இருவர்க்கும் கோலின பலம் ப்ரபத்தியினுல் ப்ரஸந்நனுன ஈஶ்வரனுடைய க்ருபையால் உண்டாகின்றது.

ப்ரஹ்ம ஸூத்ரத்தில் த்ருதீயாத்யாய த்ருதீயபாதத்தில் ஸர்வவேதாந்தப்ரத்யயாதிகரணத்திலும் விகல்பாதிகரணத்திலும் உபநிஷத்வித்யைகளின் நாநாத்வத்தையும், அவற்றின் பலம் ஏகரூபமென்பதையும் ஸமர்த்தித்திருக்கின்றது. இங்கே ஸ்ரீபாஷ்ய பங்க்தியில் வித்யைகளை விவரிக்குமிடம், முடிவில்வரும் ஆதிஶப்த வ்யாக்யாநமாக, ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் ஆதிசப்தத்தால் ந்யாஸ வித்யை விவக்ஷிதமென்று, பகவத்ராமாநுஜனுடைய திருவுள்ளத்தை வெளியிடுகின்றார். விகல்பாதி கரணத்திலும், ஸுஷ்டுநய்காரிணே ந்யாஸவித்யாஸஹிதேஷ்வேதா, என்று உபநிஷத் வித்யைகளுடன் ந்யாஸ வித்யையும்சேர்த்து, அதற்கும் அந்த வித்யைகளுடைய பலந்தான் பலமென அருளிச்செய்கிறார்.

கீதையில் ந்யாஸவித்யையை குஹ்யாத்குஹ்யதரம் என்றன்றோ பகவான் அருளிச்செய்தார்? அப்படியே தைத்தரீயோபநிஷத்தில், ந்யாஸவித்யா ப்ரகரணத்தில், தத்வித்யா ப்ரஶம்ஸநமாக, ததேதத் மஹோபநிஷதம் தேவாநாம் குஹ்யம் (இது மஹோபநிஷத் ப்ரதிபாத்யம், தேவர்களுக்கும் ஶ்ரமப்பட்டு அறியத்தக்கது) என்று சொல்லியிருக்கிறது. ப்ரபதநத்துக்குக்கரண மந்த்ரமான வஸுரண்யோ விபூரஸி எனும் மந்த்ரத்தில் வருகின்ற உபாஸே சப்தத்திற்கு ஶரணம் உபகச்சே என்று வ்யாக்யாந மிருக்கின்றபடியையும், ஜீவன் பரமாத்ம ஶேஷன் எனும் அர்த்தத்தை ப்ரதிபாதிக்கும் ப்ரணவத்தால் ஸ்வாத்ம ஸமர்ப்பணவிதி அவ்விடம் ப்ரகாஶிக்கின்ற படியையும்கண்டு, ந்யாஸ வித்யை உபநிஷத் வித்யைகளில் ஒன்றென்பதை யார்தான் மறுக்கக்கூடும்.

இந்த வித்யைக்கு மற்றவித்யைகளைக் காட்டிலும் ஏற்றத்தைப் பகவான் லோகஹிதத்தை உத்தேசித்து ஸ்வயமே ஸ்வாவதாரங்களில் காட்டியருளினன்.

பத்ராதிபர்.

# அஹோபில மாஹாத்ம்யம்.

## நான்காவது அத்தியாயம்.

(தொடர்ச்சி.)

புராணங்களாலாவது, இதிஹாஸங்களோடு கூடிய ஸ்ம்ருதிக ளாலாவது எப்படி நமக்கு அவமானமுண்டாகாதோ, அப்படிக்கு நாம் ப்ரயத்நம் செய்யக்கடவோம். இதில் ஸம்சயமில்லை," என்று காடுகள்தோறும் போயின. எல்லா வேதங்களும் பர்வ தத்திலேறி, லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்கு முன் புறத்தில் ரோமாஞ் சம் உண்டாகும்படி அதிபயங்கரமான தபஸ்ஸைச் செய்தன. பிறகு பகவான் ப்ரஸந்நனாகி, ஜடையைத் தரித்து, அந்த வேதங்களைப் பார்த்து "உங்களைக்குறித்து ஸர்வலோகமும் மயிர்க்கூச்செறியும்படி தவஞ்செய்கிறபொழுது, ஆத்மஜ்ஞான மில்லாதவன் போல் கோரமான தவத்தை நீங்கள் ஏன் செய் கிறீர்கள்?" என்றார். அப்போது வேதங்கள் "ஸர்வமும் தெரி ந்த ஜகந்நாதனே! ஹிதத்தையும் அஹிதத்தையும் தேவரீர் அறியமாட்டீரோ? ப்ரபுவே! ஈசனே! அயலார்போல் ஏன் மயக்குகிறீர்?" என்றன.

ஸ்ரீபகவான்:—உங்களுடைய கதையெல்லாம் அறிவேன். அது அவ்வாறே ஆகக்கடவது. நிச்சயம். இந்த்ராதி தேவதை களாலும், அஸுரர்களாலும், மற்றும் எவராலும், வேதங்களே! ஒருபொழுதும் உங்களுக்கு அவமானம் உண்டாகப்போகிற தில்லை. அவ்வாறு எவர்கள் வேதங்களின் மார்க்கங்களை நிந்திக் கிறார்களோ, அவர்கள் எல்லாரும் பாஷண்டிகளாவர். எந்த சாஸ்த்ரங்களும், புராணங்களும், இதிஹாஸங்களும், ஸ்ம்ருதி களும் உங்கட்கு விருத்தங்களோ, அவைகள் அதிகமாயிருந்த போதிலும், பல விதங்களாக இருப்பினும், கள்ளுடன் சேர்ந்த கங்காஜலம் போலக் கெட்டவைகளாகும். இது முதல் இந்தப் பர்

வதத்தை, இவ்வுலகம், உங்களுடைய பெயரைக்கொண்டு வேத பர்வதம் என்று சொல்லப்போகிறது. நிச்சயம். இப்படி உங்களுக்கு வரம் என்னுல் அளிக்கப்பட்டது" என்று சொல்லி அந்தர்த்தாநம் அடைந்தார். அது முதல் இந்தப் பர்வதத்துக்கு வேதபர்வதம் என்கிற பெயர் உண்டாயிற்று. லக்ஷ்மீ கடாக்ஷம் விழுந்ததனுல் இந்தப் பர்வதம் எப்பொழுதும் பழங்கள் புஷ்பங்கள், கொடிகள், இவைகளால் நிறைந்து ப்ரகாசிக்கின்றது. வேதாசலத்தின் மேற்குப் பாகத்தில், லக்ஷ்மீ இருக்கும் இடத்திற்கு அருகில், தென் திசையை நோக்கிக்கொண்டு பகவானுன யோகாநந்த ந்ருஸிஹ்மன், மஹாத்மாவான ப்ரஹ்லாதனுக்கு யோகாப்யாஸத்தைச் செய்துவைத்தார். அது முதல் லோகங்கள் அவரை யோகாநந்தர் என்று சொல்லுகின்றன. அதற்கு வாயு திக்கில், பகவானுன ந்ருஸிஹ்மன், யோகாநந்த ரூபியாய்க் குகையில் ப்ரகாசிக்கிருர். கருடாசலத்தின் தெற்கில் பாவநம் என்ற தீர்த்தம் இருக்கிறது. அங்கு பகவானுகிய விஷ்ணு நரசிங்க ரூபத்தைத் தரித்தவராயிருக்கிருர். அந்த ந்ருஸிஹ்மன் தன்னை அடைந்த ஜந்துக்களுக்கு வேண்டியதைக் கொடுக்கிருர். கருடாசலத்தின் மேற்றிசையில், ஸமீபத்தில் குந்துமணி மரம் ஒன்று இருக்கிறது. அதன் அடியில் ந்ருஸிஹ்மன் எழுந்தருளியிருக்கிருர். அதற்குத் தென்மேற்கு மூலையில் ஒரு மைல் தூரத்தில் குடைபோல் கவிழ்ந்துகொண்டிருக்கும் ஆலமரத்தின் நிழலில் ந்ருஸிஹ்மன் எழுந்தருளியிருக்கிருர். அதற்கு வடக்கில் பர்வதங்களினுல் சூழப்பட்ட தீர்த்தங்களுள் மேலான பார்க்கவ தீர்த்தத்தில் ந்ருஸிஹ்மன் எழுந்தருளியிருக்கிருர். அசலச்சாயமேரு வென்கிற பர்வதத்தின் நடுவில் ஜ்வாலா ந்ருஸிஹ்மன் எழுந்தருளியிருக்கிருர். இந்த ஒன்பது ந்ருஸிஹ்மர்களும் ஒன்பது விதமான மாதிரிகளை யுடையவர்கள். ஒவ்வொரு ந்ருஸிஹ்மனுடைய ப்ரபாவமே, ப்ருஹ்மாவினுலும் சொல்ல முடியாது. ஆனுலும், கொஞ்சம் கொஞ்சம் தனித் தனியே வரிசைக்ரமமாகச் சொல்லுகிறேன்.

மதுஸூதநனுகிய பகவான் வராஹ ரூபியாய் இங்கே எழுந்தருளியிருக்கிருர். இது, க்ஷேத்ரங்களுக்குள் உத்தமோத்தமமான வராஹக்ஷேத்ரமென்று சொல்லப்படும். இவ்விடத்தில்

பகவானுடைய ஸந்நிதியில், வ்ருதநியமத்தோடு கூடியவர்களாய், எவர்கள் வைஷ்ணவ மந்த்ரத்தை ஜபம் செய்கிறார்களோ, ஏழு அல்லது ஐந்து தினங்களுக்குள்ளாகவே அவர்கள் ஸித்தியைப் பெறுகிறார்கள். ஸந்தேஹமே இல்லை. பூமியில் விருப்பமுள்ளவர்களாயினும், ராஜ்யத்தில் விருப்பமுள்ளவர்களாயினும், எந்த மனிதர்கள் இந்த ஸ்தோத்ரத்தைக் கொண்டு, காலையிலும் மாலையிலும் நியதர்களாய் 6 - மாஸகாலம் ஸ்தோத்ரம் செய்கிறார்களோ, அவர்கள் விரும்பியவற்றை அடைவார்கள். "ஸர்வரூபியாயும், சக்தியைத் தரித்தவராயுமிருக்கிற தேவரீரை நமஸ்கரிக்கிறேன்; இதிலிருந்து இப்பொழுது என்னைத் தரிக்கக்கடவீர். முன்பு நான் உம்மிடத்திலிருந்தே உண்டானவள்; உம்மாலேயே தரிக்கப்பட்டவள். ஜநார்த்தநனே! உம்முடைய ரூபமாகவே இருந்தவள். அப்படியே ஆகாயம் முதலிய பூதங்களும், மற்றும் எல்லாம் உம்முடைய ரூபமே. பரமாத்மாவே! உம்மை நமஸ்கரிக்கின்றேன். புருஷரூபியே! உம்மைத் தொழுகின்றேன். ப்ரதாநவஸ்துவாயும் காலமாகவு மிருக்கிற உம்மை ஸேவிக்கிறேன். எல்லாப் பூதங்களையும் படைப்பவர் நீர்; தந்தையும் நீர்; நாசம் செய்பவரும் நீர். ஸ்ருஷ்டிக்கு முதலில் இருக்கிற பரப்ருமமும் நீர். விஷ்ணு ருத்ரர்களுடைய ரூபத்தைத் தரித்தவரும் நீரே. லோகங்களை யெல்லாம் விழுங்கியபின், லோகமெங்கும் ஒரே ஸமுத்ரமாகச் செய்த காலத்திலும், ஜ்ஞாநவான்களால் த்யாநிக்கப்படுகிற தேவரீரே மிகுதியாக இருக்கிறீர். கோவிந்தனே! உம்முடைய பரரூபத்தை ஒருவரும் அறியவில்லை. அவதாரங்களிலுள்ள ரூபத்தைத் தேவதைகள் பூஜிக்கிறார்கள். பரப்ருஹ்மமே! முமுக்ஷுக்கள் உம்மையே ஆராதித்து முக்தியை அடைந்தார்கள். வாஸுதேவனை ஆராதிக்காமல் எவன் தான் மோக்ஷத்தை அடைவான்? எந்த ரூபம் மநஸ்ஸினாலும் புத்தியினாலும் அறியத்தக்கதோ, கண் முதலியவைகளால் அறியக்கூடாததோ அப்படிப்பட்ட ரூபங்களெல்லாம் உம்முடையதே. நான் உம்முடைய மயமானவள். உம்மையே ஆதாரமாக உடையவள். உம்மாலேயே ஸ்ருஷ்டிக்கப்பட்டவள். உம்மையே ஆச்ரயித்தவள். ஆகையினாலேயே என்னை மாதவியென்றே அறியத்தக்கவளாய்ச் சொல்லுகிறது. எல்லா ஜ்ஞாநமு மாகிறவரே! ஸ்தூல ரூபியானவரே! ஆநந்த மயமானவரே! அவ்யக்திரூபியே!

வ்யக்தரூபமான ப்ரபுவே! பராபர ரூபியே! ப்ரபஞ்சரூபியே! யஜ்ஞபதியே! தோஷமில்லாதவரே! ஜயிக்கக்கடவீர். யஜ்ஞமும் நீரே. வஷட்காரமும் நீரே. ஓங்காரமும் நீரே. அக்நிகளும் நீரே. வேதங்களும் நீரே. ஆறு அங்கங்களும் நீரே. ஹரியே! யஜ்ஞ புருஷனும் நீரே தான். ஸூர்யன் முதலிய க்ரஹங்களும், தாரைகளும், நக்ஷத்ரங்களும், எல்லா உலகமும், ரூபத்தோடு கூடிய வஸ்துக்களும், அரூபியான வஸ்துக்களும், கண்ணால் காணக்கூடியதும், காணக்கூடாததும், என்னால் சொல்லப்பட்டதும், சொல்லப்படாததுமாகிய எல்லாம், பரமேச்வரனான புருஷோத்தமனே! நீரே தான். உம்மை அடிக்கடி நமஸ்கரிக்கின்றேன்" என்று பூமிப்பிராட்டி பகவானைக் குறித்து ஸ்தோத்ரம் செய்தாள். இதை எந்த மனிதர்கள் படிக்கிறார்களோ, லோகத்தில் மனிதர்களைக் கேட்பிக்கிறார்களோ, அவர்கள் உயர்ந்த ஸித்தியை அடைகிறார்கள். பூமியிலுள்ள எல்லாப் பலன்களையும் அடைகிறார்கள். வேதாசலத்தினுடைய அழகிய சிகரத்தில் லக்ஷ்மீ க்ஷேத்ரம் என்று சொல்லப்பட்டதல்லவோ? அவ்விடத்தில் பகவானாகிய விஷ்ணு, ந்ரஸிஹ்ம ரூபியாய் லக்ஷ்மியோடு கூட வஸிக்கிறார். எந்த மநுஷ்யர்கள் லக்ஷ்மியினிடத்தில் பக்தியுள்ளவர்களாய் இம்மையில் ஸம்பத்தையாவது, இந்த்ர பதவியையாவது விரும்பி, லக்ஷ்மீ ந்ரஸிஹ்மனுடைய அஷ்டாக்ஷரத்தை, ஹோமம் செய்ததன் மிகுதியைப் புஜித்துக்கொண்டு, 6-மாஸகாலம் ஜபிக்கிறார்களோ, அவர்கள் ஏராளமான ஸம்பத்தையும் அல்லது விரும்பினவற்றையும் அடைகிறார்கள். யோகாநந்த ந்ரஸிஹ்மனுடைய க்ஷேத்ரம் யோக க்ஷேத்ரம் என்று சொல்லப்படும். அவ்விடத்தில் யோகிகளான ருஷிகள் தவத்தைச்செய்து அதன் ஸித்தியைப் பெற்றார்கள். முன்பு, சதுர்முகனாகிய ப்ருஹ்மா, சஞ்சலமான மநஸ்ஸோடு கூடியவராய், அவ்விடத்தில் கோவிந்தனை ஆராதித்து, ஸ்திரமான மநஸ்ஸையுடையவராக ஆனார். மனிதர்களுக்கு மநஸ்ஸு ஸ்திரமாகி விட்டால் பூமியில் கிடைக்காதது எது? பாவநமான இந்த க்ஷேத்ரரத்நம் லோகத்தையெல்லாம் பரிசுத்தப்படுத்துவதாகச் சொல்லப்படும். இவ்விடத்தில் பரத்வாஜர், முன்பு ப்ரும்மஹத்தியைப் போக்கடித்துக்கொண்டார். எவர்கள் பஞ்சமஹாபாதகங்களைச் செய்தவர்களோ, எவர்கள் உபபாதகமுடையவர்களோ, எவர்கள் ஜாதிக்கு நழுவுதலைச்

செய்தவர்களோ, எவர்கள் வேறே சில பாபங்களைச் செய்தவர்களோ, அவர்கள் எல்லோரும் இந்த க்ஷேத்ரத்தைத் தர்சித்ததனுலேயே அந்தப் பாபங்களிலிருந்து விடப்படுகிருர்கள். பகவான் சார்ங்கத்தையும் சக்ரத்தையும் தரித்தவராய் எந்த காஞ்சமரத்தின் அடியில் வஸிக்கிருரோ, பவநாசிநீயின் அண்டையிலிருக்கிற அது, காஞ்சக்ஷேத்ரம் என்று சொல்லப்படும். எவர்களுக்கு ஸ்நாநத்தில் இஷ்டமோ, எவர்களுக்கு ஜ்ஞாநத்தில் விருப்பமோ, அவரவர்கட்கு அந்தந்த பலத்தைப்பகவானுகிய ந்ருஸிம்ஹமன் கொடுத்தார்.

முன்னொரு காலத்தில் தூர்வாஸஸ்ஸால் சபிக்கப்பட்ட கோபிலரென்னும் முனிச்ரேஷ்டர் மந்த்ரராஜனை ஜபித்துக்கொண்டே கொஞ்ச காலம் தவம் செய்தார். வித்வானுகிய கோபிலர், மநஸ்ஸில் எல்லா சாஸ்த்ரங்களிலும் தேர்ந்தவராகவேண்டுமென்று விரும்பினுர். பிறகு பகவான், ப்ரஸந்நனுகி அன்புடன் கோபிலரை நோக்கிப் பின் வருமாறு சொன்னுர் :—''உம்மிடத்தில் ஸந்தோஷ மடைந்தேன். உமக்கு க்ஷேமம் உண்டாகக்கடவது. உமக்கு சாஸ்த்ரஜ்ஞாநத்தைக் கொடுத்தேன். ஸாராஸாரவிவேகமுடையவனுய், எல்லா சாஸ்த்ரங்களிலும் ஸமர்த்தனுகி, முடிவில் வைராக்யத்தைப் பெற்று, என்னுடைய இடத்திற்கே வரக்கடவீர். இது முதல் எவர்கள் இங்கே என்னைக் குறித்து மந்த்ரச்ரேஷ்டமான ந்ருஸிம்ஹ மந்த்ரத்தை ஜபிக்கிருர்களோ அவர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொடுக்கிறேன்'' என்று, கோபிலரிடத்தில் சொல்லிவிட்டு அங்கேயே அந்தர்தாநத்தை அடைந்தார். அப்படியே சத்ரவட க்ஷேத்ரமும் இந்த்ரன் முதலியவர்களால் ஆச்ரயிக்கப்பட்டது. எங்கே பகவான் கீழ்த்திசையை அநுக்ரஹித்துக்கொண்டு, ந்ஸிம்ஹரூபியாய் எழுந்தருளியிருக்கிருரோ, அந்த க்ஷேத்ரத்தில் ஹித்த கந்தர்வ யக்ஷாதிகள் அநேகமாயிரமாய்ப் பலவிதமான காநங்களால் புருஷோத்தமனைக்குறித்துப் பாடுகிருர்கள். ஹாஹா ஹூஹூ என்னும் கந்தர்வர்கள் மேருவினின்று வந்து, ந்ருஸிம்ஹன் திருமுன்பே ஸ்வரத்தோடு கூடிப் பாடினுர்கள். நிஷாதம், ரிஷபம், காந்தாரம், ஷட்ஜம், மத்யமம், தைவதம், பஞ்சமம் என்கிற இந்த ஸப்த ஸ்வரங்களும் மங்களத்தைக் கொடுக்கத்தக்கவைகள்,

இவைகளின் பேதத்தையும், காலங்களின் அளவையும் தெரிந்துள்ளவர்களாகவிருக்கிற அவர்களைப் பார்த்து ஹரியானவர் அதிக ப்ரீதி யடைந்தவராய் ச்ரேஷ்டமான வரத்தைக் கொடுத்தார். "இது முதல் லோகத்தில் பாடகர்களுள் நீங்களே உத்தமர்கள். லோகத்தில் உங்களைப் போன்ற பாடகர்கள் உண்டாகப் போகிறதில்லை. எவர்கள் பரத சாஸ்த்ரத்தில் நியதமான ப்ருஹ்மத்தைச் சொல்லுகிறார்களோ, அவர்கள் உங்களைக் காநத்தில் தேர்ந்தவர்களாயும் ப்ரஸித்தர்களாயும் இருப்பதாகச் சொல்லப் போகிறார்கள். அப்படியே பார்க்கவ க்ஷேத்ரம் என்னும் பெயரையுடைய ஒரு க்ஷேத்ரமிருக்கிறது. அது ஸ்வர்க்கத்தையும் மோக்ஷத்தையும் கொடுக்கிற புண்யகரமான ஓர் ஸ்தலம். அங்கே தான் மூன்று லோகங்களையும் ரக்ஷிக்கிற அக்ஷய தீர்த்தமிருக்கிறது. அதன் கரையிலுள்ள பர்வதத்தில் ந்ரஸிஹ்மன் ஸமீபத்தில் எழுந்தருளியிருக்கிறார். தாமரைகளாலும் ஸௌகந்தங்களாலும், மலர்ந்த நீலோத்பலங்களாலும், நான்கு பக்கங்களிலும் கடப்பை மரங்களாலும், நீர்வஞ்சிக்கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டதாயும், ஹம்ஸங்களாலும், நீர்காக்கைகளாலும் நிறைந்து, ஸம்ஸார தாபத்தைப் போக்குவதில் மேலானதாயுமிருக்கிற பலா, பாதிரி, கமுகு, முதலிய அநேக பழங்களோடு கூடிய மரங்கள் நிறைந்த வநங்களாலும், உபவநங்களாலும், சூழ்ந்த அக்ஷய தீர்த்தம், ஸகல பாபங்களையும் போக்கக் கூடியதாகச் சொல்லப்பட்டது. எவன் அந்தத் தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து, நியமங்களோடு கூடியவனாய், உறுதியான வ்ருத்தத்தையுடையவனாய், பரபக்தியோடு அதோக்ஷஜனாகவும் தேவேசனாகவும் இருக்கிற பகவானைப் பூஜிக்கிறானோ, அவனுடைய ஓரடியினாலேயே பரமபுருஷனுடைய பதவியான மோக்ஷம் ஆக்ரமிக்கப்பட்டதாகிறது. எவனுடைய கையில் மோக்ஷமே இருக்கிறதோ, அவனுக்கு அற்பமான ஸௌகங்கள் எவ்வளவு? இப்பொழுதும் பார்க்கவர் அவ்விடத்தில் உறுதியான தபஸ்ஸைச் செய்கிறார். எவர்கள் பார்க்கவரை அநுஸரித்துக் கொண்டு எழுந்தருளியிருக்கிற பக்தவத்ஸலனைத் தாம் தாம் இஷ்ட பலத்தைக் கருதினவர்களாய், ஸ்தோத்ரம் செய்கிறார்களோ, அல்லது நமஸ்கரிக்கிறார்களோ அவர்கள் ஸித்தியை அடைவார்கள். இந்தத் தீர்த்தத்தை அடைந்து வஸிஷ்டர் முத

லிய மஹர்ஷிகள் ந்ரஸிஹ்மனுடைய அநுக்ரஹத்தினல் தங்கள் தங்கள் பதத்தை யடைந்தார்கள். ஜ்வாலா க்ஷேத்ரம், என்னும் முக்தி க்ஷேத்ரம், பிசாசு முதலிய கெட்ட க்ருஹங்களைப் போக்கத்தக்கது. அங்கே வ்ருதத்தோடு நியமமாக இருக்கிற ருஷிகள் அதிக கவலையில்லாமலே இருக்கிறார்கள். எவர்கள் கார்த்திகை மாஸத்தில் நியமத்துடன் கூடியவர்களாய், நெய்யினுலாவது, எண்ணெயினுலாவது தேவதேவனுடைய ஸந்நிதியில் தீபமேற்றுகிறார்களோ, அவர்கள் தேஜஸ்ஸோடும் காந்தியோடும் கூடியவர்களாய்ப் பகவானுடைய ஸாயுஜ்யத்தை அடைகிறார்கள். ஆயிரம் ஸூர்யன் உதித்தாற்போன்ற தேஜஸ்ஸையுடையவராயும், வஜ்ராயுதம் போலிருக்கிறவராயும், தன்னுடைய கண்களினல் நெருப்பைக் கக்குகின்றவராயும், மின்னலின் ஸமூகத்துக்கு ஸமானமான ஸடைகளால் பயங்கரமாயும், திவ்யமாயும் கூர்மையாயுமுள்ள நகங்களால் ப்ரகாசிக்கின்ற அநேகம் பாஹு தண்டங்களால் ஜ்வலித்துக்கொண்டிருக்கிற தேஹத்தையுடையவராயும், அநேக பேதங்களையுடையவராயும், பிளக்கப்பட்ட ஹிரண்யனுடைய தேஹத்தை அணிந்தவராயுமுள்ள பெரிய ரூபத்தையுடைய ந்ருஸிஹ்மனைப் பஜிக்கிறோம். இப்படி ஒன்பது க்ஷேத்ரங்களுடைய மஹிமையும் சொல்லப்பட்டது. ந்ருஸிஹ்மனல் அடையப்பட்ட இன்னும் அநேக க்ஷேத்ரங்களும் இருக்கின்றன.

சேட்லூர் நரஸிஹ்மாசார்யர்.

154

# ஜநகநந்திநி.

## ஓர்உபாக்யாநம்.

காசிமுதலாகிய நன்னகரியெல்லாம் கார்மேனியருளாளர் கச்சிக்கொவ்வா, என்று, ஆகமாந்தார்யனுலும், நகர்கட்குள் காஞ்சீயெனக் கவிஶ்ரேஷ்டனுலும் புகழ்பெற்ற கச்சிமாநகர்கண், ப்ராஹ்மணரில் உயர்குலத்தோ ரெனப்பட்டவரும், ஆத்ரேய வம்சத்தில் பிறந்தவருமான கேசவாசார்யரெனப் பெயர்வழங்கிய வித்வானெருவர் இருந்தார். அவர் க்ருஷ்ணபக்தர். ஸாமான்ய சாஸ்த்ரங்களிலும், வேதாந்த சாஸ்த்ரங்களிலும் கரைகண்டவர். ஜ்ஞாநத்தாலும், அநுஷ்டாநத்தாலும் கீர்த்தி பொருந்திய புண்டாரீசாக்ஷமிஶ்ரரெனும் பெரியோரை ஆசார்யனுக அடைந்தவர். ஸத்சரித்ர மெனப்பட்ட வைதிக தர்மங்களைப் பகவானுடைய ஆஜ்ஞா கைங்கர்யங்களென நினைத்து நியமத்துடன் அநுஷ்டித்துக் கொண்டுவந்தவர். பரமபுருஷன் க்ருபையால் பிதாமூலமாகக் கிடைத்த அற்பமான பூஸ்திதியினின்று கிடைத்த தான்யத்தைக் கொண்டு, த்ருப்தியுடன் சரண்யன் ஆராதனத்தைச் செய்துகொண்டு சரீரயாத்ரையை நடத்திக்கொண்டுவந்தார். ஸத்ஸங்கத்தினுல் அவர் காமம், குரோதம் முதலான துர்குணங்களைக் கூடியமட்டும் ஜெயித்தவர். ஆசார்யன் இருக்கையிலும் அநேக சிஷ்யர்களால் ஆஶ்ரயிக்கப்பட்டவர். அவர் தம்பெரியோர் வஸித்த இடம்படாத தம்முடைய இல்லமதில், கற்பில்சிறந்த ஹரிப்ரியை எனும் மனைவியுடனும், பத்தாம்பிராயத்தை முடித்திலாத அழகில்சிறந்த ஜநகநந்தினி யெனப் பெயர்வாய்ந்த தமது பெண்மணியுடனும், இல்லறம் நடத்திவந்தார்.

ப்ராஹ்ம முஹூர்த்த மெனப்பட்ட அருணோதயத்திற்கு முன்பாகவே இவர் துயிலெழுந்து, பகவானுடைய நாமங்களை உச்சரித்துவிட்டு, "பவக்கடலில்களித்து விளையாடும் நலமறியாத மானிடர்கள், தாமரைக்குளத்தில் விளையாடக் காலிட்ட மதங் கொண்ட யானையானது முதலையால் ஆக்ரமிக்கப்பட்டதுபோல், ஒருகாலத்தில் தம்முடைய தீவினையால் ஆக்ரமிக்கப்படுகின்றர். அந்தக் கஜேந்த்யன் தனக்கோர் ரக்ஷகரைக் காணுமல் ஜகத்காரணனை நினைத்துக்கூவவே, எங்கும் நிறைந்த இறைவன், தன்பக்தன் துயர்நீக்கத் துரிதமாய்க் கருடன்மீதேறி வருபவனென, அவனுக்குக் காட்சிதந்து காத்தானன்றே? தீவினையில் மூழ்கித்தமது ரக்ஷணத்தில் அஸமர்த்தராய்க்கதறும் எம்போலியரையும் அந்தப்பகவான் ரக்ஷிக்கட்டும். அதற்காக இந்த விடியற்காலத்தில் அவனை நான் ஸ்மரிக்கின்றேன்; மநத்தாலும், வாக்காலும், சிரத்தாலும், பரமபுருஷனுன நாராயணன் திருவடிகளை வணங்குகின்றேன். பூர்வம் என்னுல் ஸம்பாதிதங்களான எனது ஸர்வபாபங்களினின்றும் எனக்கு அபயம்தரவல்ல பரமனை இவ்விடியற்காலத்தில் பஜிக்கின்றேன்" என்றிவ்விதமாகப் புருஷோத்தமனைத்யாநித்தார்.

பிறகு சாஸ்த்ரம் விதித்த நியமங்களைத் தவறுமல் தத்காலம் கர்தவ்யங்களை யநுஷ்டித்துவிட்டு, ச்வேதபுஷ்கரிணிக்குச்சென்று, ஸ்நாந ஸந்த்யோபாஸநாதி ஆஜ்ஞா கைங்கர்யங்களை முடித்துக்கொண்டு, அந்த வித்வான் ஸ்வாவாஸம் வந்து சேர்ந்தனர்.

அவர் எழுந்திருந்து பகவானுடைய நாமங்களை உச்சரிக்குமளவில் விழித்துக்கொண்ட அவருடைய பத்நி வீட்டிற்குரிய சுத்திகளைச் செய்துவிட்டு, ஜநகநந்தினியை எழுப்பி, உசிதமான கோலங்களால் க்ரஹத்தை அலங்கரிக்கும்படி ஏவிவிட்டு, ஸ்நாநார்த்தம் அநந்த ஸரஸ்ஸுக்குச் சென்றனள். புருஷன் திரும்புவதற்குமுன்பே வீட்டிற்குத்திரும்பி அவராகமநத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனள். ஜநகநந்தினியும் வீட்டை ரங்கவல்லிக

ளால் அலங்கரித்துவிட்டுக் குளித்துச் சுத்தமான ஆடைதரித்து முகாலங்காரம் செய்துகொண்டு நின்றனள்.

கேசவாசார்யரும் வீட்டையடைந்து கைகால்கள் அலம்பிக் கொண்டு, ஆசமநம்செய்து, ஔபாஸநத்தால் அக்நீரூபதாரியான ஜநார்தநனை ஆராதித்துவிட்டு, எம்பெருமானுடைய ஸந்நிதியை நெருங்கி, அபிகமநா ராதநார்த்தமாக உசிதமான ஸ்தோத்ரங்களை அநுஸந்தித்துவிட்டுத் தன்வீட்டின் நடைத்திண்ணைமீது உட்கார்ந்து, க்ரந்தாவலோகனம் செய்து கொண்டிருந்தார்.

அவருடன்முன் காலக்ஷேபம் செய்தவர்களும், அவர் குருவினிடம் அப்போது காலக்ஷேபம் செய்பவர்களும், அவருடைய சிஷ்யர்களும் அக்காலம் அவரிடம் வருவதுவழக்கம். அந்தவழக்கப்படி மாதவாசார்யரென்பவரும், பத்மநாபாசார்யர் என்பவரும் அன்று கேசவாசார்யர் இல்லம் சென்றனர். வந்தந ப்ரதிவந்தநாதிகள் செய்துமுடித்தபிறகு, பின் விவரிக்கின்றபடி அவர்க்குள் ஸம்பாஷணைகள் நடந்தன. பத்மநாபாசார்யர் கேசவாசார்யரைப் பார்த்து, "ஸ்வாமிந்! அடியேனுக்கோர் ஸம்சயம்உளது. அதைத் தேவரீர் நிவர்த்திக்கவேண்டும். விசேஷ சாஸ்த்ரத்தின் அப்யாஸம் அநுஷ்டாநத்தில் பரிணமிக்க வேண்டும். நம்போலொத்தவர் ஸம்பாதிக்கும் ஜ்ஞாநத்துக்கும் நமது அநுஷ்டாநத்துக்கும் மிகுந்த வித்யாஸம் தென்படுகின்றது" என்றனர். "சொல்வதை விசதமாய்ச் சொல்லும்படி ப்ரார்த்திக்கின்றேன்" என்று கேசவாசார்யர் மொழிந்தார். பிறகு மாதவாசார்யர் "அடியேன் விஜ்ஞாபநம் செய்துகொள்கின்றேன். ஸம்சயவிஷயம் எங்களுக்குள்ளாகச் சர்ச்சைசெய்யப்பட்டது. சாஸ்த்ரஜ்ஞாநத்தின் ப்ரயோஜநம் பரமபுருஷார்த்தத்தை அடைவிக்கும் உபாயத்தில் புருஷனை ப்ரவ்ருத்திக்கச் செய்யவேண்டியதன்றோ? இப்போது பண்டிதர்களுடைய அநுஷ்டாநங்களைப் பர்யாலோசித்தால், அந்த விஷயத்தில் ஸம்சயம் ஜநிக்கின்றது. உபாயாநுஷ்டாநம் அவர்

செய்யாதிருக்கவில்லே. ஆனல் ஜ்ஞாநத்துக்குத் தக்க சித்தபரி பாகம் அவரிடம் ப்ரகாசிப்பதாகத் தெரியவில்லே." என்றனர்.

"தேவரீர்களுடைய உக்திகளில் கிஞ்சித் வைபரீத்யத்தை அபேக்ஷித்தவனுக அடியேன் இருக்கின்றேன். " என்றுரைத்தார் கேசவாசார்யர். பத்மநாபாசார்யர் " ஆத்மஜ்ஞாநம் ஹ்ருதயத்தின் கட்டுகளே அவிழ்த்து நிவ்ருத்திமார்க்கத்தில் புருஷனே மூட்ட வேண்டும்; சித்தத்தில் பற்றிய காமங்கள் முற்றிலும் அதனுல் நசிக்கவேண்டும். இவ்வண்ணம் சாஸ்த்ரம் முறையிடுகின்றது. ஜ்ஞாநம் சாஸ்த்ர பரிசயத்தால் உண்டானபின்பும், தாரபுத்ராதிக ளிடம் பற்று நிலேக்கின்றது. அவருடைய போஷணுர்த்தம் வித் வான்களும் ஸதா ப்ரவ்ருத்தர்களாய் நிற்கின்ருர்கள். இவர்களும் உபாயாநுஷ்டாநம் செய்துவிட்டு, க்ருதக்ருத்யரெனத் தம்மை நினேத்துக்கொண்டு, ஸ்வநிஷ்டையின் ஸ்வரூபத்தை மறக்கின்ருர் களன்ருே?" என்றுரைத்தார். உடனே மாதவாசார்யர் "ஆத்மா வைப்போல் ஸர்வப்ராணிகளேயும் பார்க்கவேண்டிய தன்ருே? பண்டிதர் ஸமதர்சிகளா யிருக்கவேண்டும். அப்படி யிருக்கத்தம ரென்றும் பிறரென்றும் பேதபுத்திதான் பெரியோருடைய அநு ஷ்டாநங்களில் தெரிகின்றது" என்று சொன்னர்.

இதைக்கேட்ட கேசவாசார்யர் சிறிது யோசித்து விட்டுப் பின்வருகிறபடி யுரைத்தார். "தேவரீர்கள் ப்ரச்நங்கள் மிகவும் ஸரியாவாகவே யிருக்கின்றன. பகவத் ப்ராப்திக்கு உபாயங்கள் பலவாருக விதிக்கப்பட்டன. இவற்றின் பலம்மாத்ரம் ஏகரூபமா னது. கூடியவரையில் ஹ்ருதய பரிபாகம் எல்லா உபாய நிஷ் டர்களுக்கும் ஏகரூபமாகப் பரிணமிக்க வேண்டும். உபாயங்களில் குருத்வ புத்தியும் லகுத்வபுத்தியும், ஒவ்வொன்றின் அநுஷ்டாநத் தால் உண்டாகும் க்லேசங்களின் தாரதம்யத்தைப் பொறுத்து உதிக்கின்றன. பகுஜநங்கள் கடைத்தேறவேண்டும் எனும் ஸங்கல் பத்தைக்கொண்ட கருணேக்கடலாகிய நம்மிராமாநுஜன் லகுவான உபாயத்தைத் தமது ஸம்ப்ரதாயஸ்தர்க்குக் காட்டியருளினர்.

இதுதான் ப்ரபத்தி. த்ருஶ்ய பதார்த்தங்களில் பேதத்தை அநாதரித்து ஸர்வத்ரஸமனாய் நிலேத்திருக்கும் அந்தர்யாமியான புருஷனைத் தர்சிக்க வேண்டு மென்றால், மோக்ஷத்தை அபேக்ஷித்து உபாயாநுஷ்டாநம் செய்தவர்க்கெல்லாம் இது சாக்ஷாத்ப்ரத்யக்ஷ விஷயமன்று. இந்த விஶ்வாஸம் அவர் சித்தங்களில் த்ருடப்படவேண்டும். அந்த விஶ்வாஸ தார்ட்யம் அவருடைய அநுஷ்டாநத்தால் தெரியவேண்டும். எவ்வுயிர்க்குள்ளும் இருப்பவனை ஶரண்யனிடம் நாம் கொண்டபக்தியானது, அவ்வுயிர்க்கெல்லாம் நம்மைச் செந்தண்மை பூண்டொழுகச்செய்யும். பகவான் பொருட்டு ஸர்வத்ர அநுகூலபுத்தியும், ப்ரதிகூல ப்ரவ்ருத்தியை விலக்குவதும் ப்ரபந்நன் நியமமாக அநுஷ்டிக்கத்தக்கவன். லோகத்தில் புருஷரைக் கெடுப்பவை இச்சையும் த்வேஷமும். அஹங்காரமடியாகத் தமது சரீரங்களில் அபிமானமும், சரீர ஸம்பந்திகளிடம் மமதையும் இச்சையா லுண்டாகின்றன. இந்த இச்சையெனும் காமத்துக்கு ப்ரதிபந்திகளாய் நேரிடும் மனிதரிடம் க்ரோதமும், அதன்பயனான த்வேஷமும் உண்டாகின்றன. ஆதலால் அஹங்கார மமகாரங்களைச் சக்தியுள்ளவரையில் புருஷன் ஜெயிக்கவேண்டும். இந்த ஜெயம் அப்பாஸத்தால் ஸித்திக்க வேண்டும். ஜந்மாந்தரங்களில் அப்யாஸ தார்ட்யமுள்ளவர் ஸுலபமாக அவற்றை ஜெயிக்கின்றனர். ஶாஸ்த்ரஜ்ஞாநமும், சக்தியுள்ளவரையில் அதற்குத் தக்கபடி ஒழுக்கமும் ஏற்பட்டதாகில், மநுஷ்யர் ப்ராயேண பல உத்தேஶ்யங்களால் ப்ரவ்ருத்திமார்க்க நிஷ்டர்களா யிருக்கின்றபடியால், இந்த ப்ரவ்ருத்தியில் ஏற்பட்ட ஆபிமுக்யத்தையே ஸ்வாராதநமாகப் பரிணமிக்கும்படிக் கீதாசார்யன் அநுக்ரஹித்தனர். முதலில் வர்ணாஶ்ரமோசித கர்மங்களை அவன் பண்ணின ஆஜ்ஞையை அநுஸரித்து அவன் ப்ரீணநமாகச் செய்யும் பக்ஷத்தில், அவை அவன் கைங்கர்யமாக முடிகின்றன. அவற்றுள் ஸங்கத்யாகமும் பலத்யாகமும் நிஜமாக ஏற்படுமாகில், அவை பந்தத்தின்பொருட்டு ஆகமாட்டா. தாரபுத்ராதிகளுடைய போஷணையும், அதற்கு ஸஹாயமாக நிற்கும் வ்ருத்தியும், இன்

னும் ஒவ்வொரு புருஷனுடைய ஸ்திதியடியாக நேர்ந்த வ்யாபாரங்களும், பகவதாராதனமாகக் கொண்டாடப்படுவது ஈச்வராஜ்ஞை. தாரபுத்ராதிகளும் தாரபுத்ராதி ரூபமாகப் புருஷனுக்கு விச்வா ஸார்ஹராகக்கூடாது. அவர்க்குள் நின்ற அந்தர்யாமியினிடம் நமக்கு இருக்கவேண்டிய அன்புதான் அவரிடம் நாம் பாராட்டும் அன்பிற்குக் காரணமாகத்தக்கது. இவ்வண்ணம் அன்பானது ஒவ்வொரு பாகவதனலும் ஸர்வத்ர பாராட்டப் பொருந்துமா என்று கேட்கவேண்டாம். பாராட்டத்தான் வேண்டும். இது சித்தத்தில் நிலைக்க யாவர்க்கும் பொருந்தும். சித்தத்தின்படி வாக்கும் இருக்கலாம். க்ரியாவிஷயங்களில் தாரதம்யம் ஏற்படுவது ஒவ்வொரு புருஷனுடைய சக்தியையும், அவனுக்குண்டாகும் அவகாசங்களையும்பொறுத்தது. தாரபுத்ராதி போஷணம் ஒவ்வொரு புருஷனுக்கும் தர்மமாக ஏற்பட்டது. உபபத்திக் குறைவால் ஒருவனுக்கு அவர் போஷணமே பெரும்பாரமாகலாம். அவன் அந்யருடைய போஷணத்தைப்பற்றி க்ரியாவானுகவேண்டாம். புருஷன் தாரபுத்ராதி போஷணத்தையும், கர்தவ்யமென்று நினைத்துப் பகவத் ப்ரீணநமாகவும், அந்த விஷயத்தில் தனது பற்றை விலக்கியும், செய்தானுகில், அவன் நிஷ்டைக்குக் குறையிலது. உபபத்யதிசயம் உள்ளவன் அதற்கேற்றபடிப் பரோபகாரத்தையும் அநுஷ்டிக்கத்தக்கவன். அது அவனுக்கு ஸ்வதர்ம கோடிகளில் சேரும். இவ்விதமாக ப்ராப்தமாகும் ஆராதநம் விபுலமாயிருக்கவேண்டுமென்பது ஸ்ரீக்ருஷ்ணன் திருவுள்ளமன்று. அதில் புருஷனை மூட்டுகின்ற பக்தியின் ஆதிக்யத்தைத்தான் அவன் விரும்புகின்றான். ஆதலால். பகவான்.

𑌯𑌤𑍍𑌕𑌰𑍋𑌷𑌿 𑌯𑌦𑌶𑍍𑌨𑌾𑌸𑌿 𑌯𑌜𑍍𑌜𑍁𑌹𑍋𑌷𑌿 𑌦𑌦𑌾𑌸𑌿 𑌯𑌤𑍍 ।
𑌯𑌤𑍍𑌤𑌪𑌸𑍍𑌯𑌸𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌤𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌷𑍍𑌵 𑌮𑌦𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥

𑌪𑌤𑍍𑌰𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌫𑌲𑌂 𑌤𑍋𑌯𑌂 𑌯𑍋 𑌮𑍇 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 ।
𑌤𑌦𑌹𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌹𑍃𑌤𑌮𑌶𑍍𑌨𑌾𑌮𑌿 𑌪𑍍𑌰𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥

என்றருளிச்செய்தான். சக்திக்குத் தக்கபடிச் செயப்பட்ட அல்பபூஜையையும் அவன் அங்கீகரிப்பது புருஷனுடைய பக்தியைப் பொறுத்தது. பெரிதாயோர் கார்யம் செய்தெனக்கு அர்ப்பணம்

செய்யென்று அவன் கேட்கவில்லை. எதை உன் சக்திக்கு அநுகுணமாக நீ செய்கின்றையோ அதை (அதாவது. அதன்பலத்தை) எனக்குத்தந்துவிடு என்றவன் சொல்லியிருக்கின்றுன். ஆதலால் பெரியோர் க்ரியாவந்தராயும், ஸங்நிஹித பந்துபோஷகராகவும் இருக்கக்குறையில்லை. "நியதம் குரு கர்ம த்வம், தஸ்மாதஸக்த: ஸததம் கார்யம் கர்ம ஸமாசர, ஸ்வயமேவ நியதம் ச்ரேய:, க்ஷிப்ரம் ஹி மாநுஷே லோகே ஸித்திர்பவதி கர்மஜா, கர்மண்யேவாதிகாரஸ்தே, ஜ்ஞாநாக்நிதக்தகர்மாணம் தமாஹு: பண்டிதம் புதா:, யஜ்ஞாயாசரத: கர்ம ஸமக்ரம் ப்ரவிலீயதே, ஆத்மவந்தம் ந கர்மாணி நிபத்நந்தி, ஸ்வபாவஜ: கர்மகாரேண ஹேதுஸ்ஸ்தாநி வத்யதே।" இத்யாதி வசநங்களை ஆலோசித்தால், பெரியோருடைய அநுஷ்டாநம் உபபந்நமாகத்தோன்றும். பகவானுடைய ஆஜ்ஞையை ஸ்மரித்துக்கொண்டு, தாம் அதன்படி அநுஷ்டிப்பதாக எண்ணிக்கொண்டு, ஸங்நிஹிதமான கர்மங்களைக் கர்தவ்யம் எனும் புத்தியால் செய்துகொண்டு, அவற்றினிடம் ஸங்கத்தை விலக்கிச் செய்தாராகில், அவருடைய ஜ்ஞாநத்துக்கும், க்ருதக்ருத்யதாபுத்திக்கும், தோஷம் சொல்லவொண்ணுது." என்று சொன்னுர்.

இவ்வண்ணம் சிறிது காலம் ஸம்பாஷித்துவிட்டு மாதவாசார்யரும், பத்மநாபாசார்யரும் புறப்பட்டுப்போனுர்கள். இவர்கள் வார்த்தைகளையும், தனது பிதாவின் உக்திகளையும், தாழ்வாரத்தில் நின்றுகொண்டு, ஜநகநந்திநி விடாமல் கேட்டனள். ஜந்மாந்தர ஸம்ஸ்காரத்தால் அவளுக்கு மஹான்களுடைய க்ரஹத்தில் ஜந்மம் உண்டாயது. அந்தக்காரணத்தினுலும், அநவரதம் ஸாதுக்களுடைய வார்த்தைகளைக் கேட்பதினுலும், அவற்றைப்பற்றிப் பிதாவுடன் ஸம்பாஷிப்பதாலும், அந்யர்க்கு விளங்காத தத்வார்த்தம் யாவும் அவள் புத்தியில் தெளிவுடன் பதிந்தன. மற்றவர் சென்ற பிறகு பிதாவின் முன்சென்று, தண்டனிட்டு, இவ்வண்ணம் மொழிந்தனள்.

"அப்பா! அந்த ஸ்வாமிகளுடைய ப்ரச்'னைகளையும் தேவரீர் விளம்பிய ஸமாதானங்களையும் கேட்டேன். தேவரீர்க்கும் அடியேனுக்கும், பிதாவென்றும் புத்ரியென்றும், ஓர் ஸம்பந்த விசேஷத்தை நம்பி, அதனிமித்தம் ஸந்தோஷமும் கொண்டிருந்தேன். அந்த ரூபமான ஸம்பந்த ஜ்ஞானத்தை அஸ்மதாதிகளிடம் தேவரீர் ஒழித்து வர்த்திப்பதாக அடியேன் நினைக்கும்படி நேரிட்டது."

"ஆனால் என்ன? நீ ஸாமாந்ய ஸத்ரீபுத்தி யுள்ளவளன்றே? தத்வார்த்தங்களை ஸததம் சிந்திப்பவளென்று உன்னை நான் எண்ணுகின்றேனே. விபீஷணன் தாரபுத்ராதிகளை த்யாகம்செய்து விட்டு ராகவனைச் சரணமடையவில்லையா? ஸர்வபந்துக்களையும் நிவர்த்தித்துப் பகவானிடம் கோபஸ்த்ரீகள் அடிமை செய்ய விரும்பவில்லையா? தாரபுத்ராதிகளும், வித்தபோகங்களும் எந்தப் பரமாத்மா நிமித்தமாக நம் விச்'வாஸத்துக்குப் பாத்ரமாகின்றனவோ, அந்தப் பரமாத்மாவினிடம் நமக்கு இருக்கவேண்டிய அன்பு அளவிடக்கூடியதன்றே! அவன் ஸர்வத்ர இருக்கின்றானாகையால், அவன்பொருட்டு ஸர்வமும் அவனைப்போல் அன்புடன் தர்சிக்கத்தக்கவையன்றோ? இந்த அன்பானது கேவலம் சரீர ஸம்பந்த ஜ்ஞானத்தால் உண்டாகும் அன்பைக்காட்டிலும் மிக்கதன்றோ? ஆதலால் அத்தகைய அன்பை உன்னிடம் நான் பாராட்டுவதால் உனக்கு ஸந்தோஷம் குறைவானேன்?" என்று கேசவாசார்யர் கூறினர்.

இதைக்கேட்ட பெண்மணி, "அப்பா! நான் உம் பெண் என்பது நம்மிருவர்க்கும் தனிமையில் ஏற்பட்ட ஸம்பந்தம். இதனால் பரஸ்பரம் உண்டாகும் விச்'வாஸம் நம்மிருவர்க்கும் அந்யத்ர உண்டாகாது. அந்தர்யாமி சிந்தனையால் உண்டாகும் விச்'வாஸம் எல்லாரிடமும் ஸமந்தானே" என்றனள்.

"ஆகிலும் அந்த அன்பானது சரீர ஸம்பந்த ப்ரயுக்தமாக ஜநிக்கும் அன்பைக்காட்டிலும் ஆழ்ந்ததன்றோ?" என்று அவள் பிதா உரைத்தார். பெண்மணியும், "அது அப்படியிருக்கலாம். பகவத் ஸம்பந்த மடியாகவரும் அன்பை அடியேனிடம்போலவே மற்ற யாவரிடமும் தேவரீர் ஆவிஷ்கரிக்கவேண்டுமன்றோ?" என்று கேட்டாள். அதற்குக் கேசவாசார்யர், "மாநஸீகமாக அப்

படித்தான் இருக்கவேண்டும். வாக்கும் மநஸை அநுஸரித்துச் செல்லும். க்ரியையில், எனது பக்தி ஸங்நிஹித பந்துபோஷணத்தில் மாத்ரம் பர்யவஸிக்கும். பகவத் ஸங்கல்பத்தால் இது எனக்கு விஹிதமான பரம். உன்னுடைய ஐஹிக ஸம்ரக்ஷணையைப் பரமபுருஷன் என்னை வ்யாஜமாகக்கொண்டு நடத்துகின்றானாகையாலும், அந்த விஷயம் நமது சரீர ஸம்பந்தமடியாக ஏற்பட்டதாகையாலும், க்ரியையில், மற்றோரைக்காட்டிலும் உன்னிடம் நான் ஸமதர்சநரூபமான அன்பை விசேஷமாகப் பாராட்டுகின்றேன். ஆதலால் நீ வ்யஸநப்பட அவஸரம் இலதே. ஆழ்வார் பாசுரத்தை மறந்தையோ? வேதத்தின் படிப் புருஷனுக்கு ஏற்பட்ட ஆயஸ் நூறு வருஷம். அதில் பாதி உறக்கத்தில் கழிகின்றது. மிகுதியுள், சைசவம், பால்யம், வார்த்தகம் இவற்றின் பங்குகள் நீங்கப் பிணியாலும், துன்பத்தாலும் பீடிக்கப்பட்ட காலங்களையும் கழித்துப்பார்த்தால், சரீரங்களிலும், அவற்றால் வரும் ஸம்பந்தங்களிலும் பற்றுள்ளவர் மதியுள்ளவர் ஆகமாட்டார். ஆதலால் சரீரஸம்பந்தங்களை அதிகமாகப் பாராட்டவேண்டாம். பகவத் சேஷத்வம் ஸர்வஸமம். அந்த ஜ்ஞாநத்தாலும், பகவான் நம்மிருவரையும் ஐஹிகத்தில் சேர்த்துவைத்தபடியால், சேர்ந்து நாம் அவனுக்குச் செய்யும் ஆராதநத்தாலும், நமக்குள் உண்டாயிருக்கும் ஸ்நேஹமன்றோ வியக்கத்தக்கது? ஸமுத்ரத்தில் காற்று மழையில் ஒரு கட்டையுடன் மற்றொன்று சேர்ந்து, இரண்டும் சில காலம் கூடி மிதந்துகொண்டுபோய்க் காலாந்தரத்தில் ஓரலையால் பிரிக்கப்பட்டுத் தனித்தனியே பிரிந்துபோவதுபோல், சில ஆத்மாக்களின் கர்மபலமாக அவற்றிற்குச் சரீர ஸம்பந்தம் நேரிட ஜந்மமுண்டாவதும், அந்தக் கர்மம் அநுபவத்தால் முடிந்த பிறகு, அந்தச் சரீரிகள் ஒவ்வொன்றின் சரீர நாசத்தால் பிரிந்துபோகின்றதும் ஸஹஜந்தானே. பெண்ணே! ஜ்ஞாநமுள்ள உனக்கு இவ்விதமாக யோசனைகள் உதிக்கலாமோ?" என்று ஸமாதாநம் கூறினார்.

இதற்குள் மாத்யாஹ்நிகஸ்நாந ஸமயம் கிட்டவே கேசவாசார்யர் எழுந்துவிட்டார். ஜநகநந்தினியும் தனக்குரிய க்ரஹவ்யாபாரங்களைச் செய்யப்போனாள்.

பத்ராதிபர்.